விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු




வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 21.04.2021 புதன்கிழமை | இதழ் : 141 | பக்கங்கள் : 16

# கொரோனா தொற்றை காரணம் காட்டி மே தின கூட்டங்களுக்கு தடை விதிப்பு!

கொழும்பு, ஏப்.21

மே தினத்தை முன்னிட்டு பொதுக் கூட்டங்களையும், பேரணிகளையும் நடத்தாமலிருக்க அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் இணக்கம் தெரிவித்துள்ளனர் என கொரோனா ஒழிப்புக்கான தேசிய செயல்பாட்டு மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

## பங்காளிகளை அடக்க பெரமுன புது வியூகம்!

சிறிலங்கா சுதந்திரக்கட்சி இம்முறை தனித்து மே தினக் கூட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளது என அந்தக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன நேற்று அதிரடியாக அறிவித்த சில மணி நேரங்களுக்குள் கொரோனா ஒழிப்புக்கான தேசிய செயல்பாட்டு மத்திய நிலையம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் மே தினக் கூட்டம் தொடர்பிலான முன்கூட்டிய நடவடிக்கைகள் அனைத்தும் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

மே தினக் கூட்டம் தொடர்பில் அனைத்து அரசியல் கட்சி 15

# இந்தியாவைப் பகைத்து எதையும் செய்யமுடியாது!

## அரசுக்கு இடித்துரைத்தது எதிரணி



கொழும்பு, ஏப்ரல் 21

**கொழும்பு துறைமுக நகரத்தை பாராளுமன்றத்தின் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும், எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.** 15

## ஜே.வி.பி. கடும் எதிர்ப்பு!

கொழும்பு, ஏப். 21

அனைத்து மே தின பேரணிகளை நிறுத்துவதற்கான அரசாங்கத்தின் முடிவை மக்கள் விடுதலை முன்னணி எதிர்ப்பதாக அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் 15

## யாழ்ப்பாணத்தில் மேலும் ஏழு பேருக்கு கொரோனா

யாழ்ப்பாணம்,ஏப்.21

யாழ்ப்பாணத்தில் மேலும் ஏழு பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்றுச் செவ்வாய்க்கிழமை உறுதி செய்யப்பட்டது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரி 15

## மாகாணசபை தேர்தல்களை விரைவில் நடத்த வேண்டும்

### இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர்

புதுடில்லி, ஏப் 21

இலங்கை விரைவில் மாகாண சபை தேர்தல்களை நடத்த வேண்டும் என இந்தியா எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளது. மாகாண 15

## தடுப்பூசிக்கு பற்றாக்குறை கிடையாது!

கொழும்பு, ஏப். 21

இரண்டாம் கட்டமாக தடுப்பூசி செலுத்துவதற்கு தடுப்பூசி பற்றாக்குறை காணப்படுவதாக வெளியாகும் செய்திகளில் 15

## பேராயர் தனது கருத்தை மாற்றிக்கொண்டது ஏன்?

### கேள்வி எழுப்புகின்றது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஏப். 21

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் முதல் நாள் தெரிவித்திருந்த கருத்தை மறுநாள் திருத்தியுள்ளார். இதன்மூலம் விஜயதாஸ ராஜபக்ஷவை தொலைபேசில் ஜனாதிபதி மிரட்டியதாகக் கூறப்படுவது 15


## 'அரசியல் பழிவாங்கல்' அறிக்கைமீது சபையில் இரண்டு நாட்கள் விவாதம்

கொழும்பு, ஏப். 21

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கைமீது எதிர்வரும் 22ஆம், 23 ஆம் திகதி 15

## 30 வருட யுத்தத்தில் உயிரிழந்தோரையும் நினைவுகூர அனுமதிக்க வேண்டும் அரசு!

### யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஏப். 21

ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்த அரசாங்கம் பாதுகாப்பளித்து அனுமதி அளிப்பதைப் போல, 30 வருட யுத்தத்தின்போது உயிரிழந்தோரையும் நினைவு கூருவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கவேண்டும் என யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

எங்கள் நாட்டில் கடந்த 30 ஆண்டுகளாக நடைபெற்ற போரின்போது 15

## ஆளும் தரப்புக்குள் மோதல் உக்கிரம் தனித்து செயற்பட சு.க. தீர்மானம்!

### மைத்திரி நேற்று அதிரடி அறிவிப்பு

கொழும்பு,ஏப்.21

ஆளும் கூட்டணிக்குள் மோதல்கள் உக்கிரமடைந்துள்ள நிலையில், சிறிலங்கா சுதந்திரக் கட்சி மே தினக் கூட்டத்தை தனித்து நடத்துவதற்கு நேற்று தீர்மானித்தது. கட்சியின் 15

## 6 கிராமசேவகர் பிரிவுகளை மகாவலி திட்டத்துக்குள் கொண்டுவர திட்டம்

### உடன் நிறுத்துமாறு கஜேந்திரன் கோரிக்கை

கொழும்பு, ஏப், 21

தமிழ் கிராமங்களை அபிவிருத்தி என்ற பெயரில் மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்குள் உள்வாங்கி முழுமையாக சிங்கள மயப்படுத்தும் திட்டத்தை அரசு முன்னெடுத்து வருவதாக குற்றம் சாட்டிய தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் எம்.பி. செல்வராஜா கஜேந்திரன் ஜனாதிபதி உத்தரவென பொய் 15

## யாழில் வாள்வெட்டு: குடும்பஸ்தர் மரணம்

### மூவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஏப்.21

பருத்தித்துறை அல்வாய் பகுதியில் குடும்பத் தகராறு காரணமாக இடம்பெற்ற மோதலில் குடும்பஸ்தர் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

அத்தோடு மூவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார 15

**உண்மைகள் புனிதமானவை: கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6 கிராம சேவகர்...

கூறியே இவ்வாறான அபகரிப்புக்கள் இடம்பெறுகின்றன - என்றார்.

அத்துடன், முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைத்துரைப்பற்று பிரதேச செயலக பிரிவில் கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் மேற்கு, கொக்குத் தொடுவாய் மத்தி, செம்மலை கிழக்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபைக்குள் கொண்டு செல்லும் நடவடிக்கையை உடனடியாக நிறுத்துமாறும் அவர் வலியுறுத்தினார்

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் கீழான 5 ஒழுங்கு விதிகள் மற்றும் மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு வேண்டுகோள் விடுத்த அவர் மேலும் கூறுகையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைத்துரைப்பற்று பிரதேச செயலக பிரிவில் கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் மேற்கு, கொக்குத்தொடுவாய் மத்தி, செம்மலை கிழக்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையிடம் கையளிக்குமாறு அரச உயர மட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட அழுத்தம் காரணமாக வடக்கு மாகாண காணி ஆணையாளர் அலுவலகம் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலகத்துக்கு திங்கட்கிழமை அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்கள்.

இவ்வாறான செயல்பாடு ஒன்று நடைபெறப்போகின்றது என்பதனை அறிந்து வடக்கு மாகாண தமிழ் மக்களின் பிரதிநிதிகள்,இவ்வாறு செய்ய வேண்டாம். நாம் ஏற்கனவே இது தொடர்பில் அமைச்சருடன் பேசியுள்ளோம் .இது தொடர்பில் குழு ஒன்று அமைக்கப்பட்டு ஆராயப்பட்ட பின்னர்தான் முடிவு எடுக்கப்படும் என்று இணங்கப்பட்டுள்ளது என்று சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு சொல்லியும் கூட கொழும்பிலிருந்து வந்த அழுத்தம் காரணமாக அந்தக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மகாவலி அபிவிருத்திஅதிகார சபைக்குள் இந்த 6 கிராமசேவகர் பிரிவுகளையும் கொண்டு செல்வது என்பது முழுமையாக தமிழர்களிடமிருந்து அந்த நிலங்களை அபகரித்து அந்த நிலங்களை முழுமையாக சிங்கள மயப்படுத்தும் நோக்கமாகவே இதனை நாங்கள் கருதுகின்றோம். இந்த பிரச்னை கடந்த ஆண்டு இறுதியில் ஏற்பட்டபோது இது தொடர்பாக மகாவலி அபிவிருத்தி அதிகாரசபைக்கு பொறுப்பான அமைச்சர் சமல் ராஜபக்ஷவை சந்திப்பதற்கான நேரத்தை நாம் கோரியிருந்தோம். அதன் பிரகாரம் வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தமிழ் எம்.பி.க்களும் ஆளும்கட்சி தமிழ் எம்.பிக்களும் அமைச்சர் சமல் ராஜபக்ஷவை சந்தித்து மகாவலி அபிவிருத்திஅதிகாரசாப்டுக்குள் இந்த 6 கிராமசேவகர் பிரிவுகளையும் கொண்டு செல்ல வேண்டாமென கூட்டாக கோரிக்கை விடுத்திருந்தோம்.

அவ்வாறு கொண்டு சென்றால் அதனது காணி நிர்வாகம் மகாவலாபிவிருத்தி அதிகாரசபைக்கு செல்லும். இதனால் தமிழ் மக்களுக்கு பெரும் பாதிப்புக்கள் ஏற்படும் . அங்குள்ள 5000க்கு மேற்பட்ட குடும்பங்கள் தங்களது நிர்வாக செயற்பாடுகளை கரைத்துரைப்பற்று பிரதேச செயலகத்துடனும் முல்லைத்தீவு மாவட்ட கச்சேரியுடனும் சிறப்பாக முன்னெடுக்க கூடிய நிலையில் இந்த நிர்வாகம் மாற்றப்பட்டால் தமிழ் மக்களுக்கு நூற்றுக்கு நூறு வீதம் பாதிப்பு ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக அப்பகுதிக்கு விஜயம் செய்தபோது அந்தக் காணிகள் அனைத்தும் அந்த மக்களிடம் கையளிக்கப்படவேண்டுமென கூறியிருந்தார். அமைச்சர் சமல் ராஜபக்ஷவுடனான எமது சந்திப்பின்போது இவ்விடயம் தொடர்பில் ஒரு குழு அமைத்து ஆராய்வதென தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும் கொரோனா காரணமாகவோ அல்லது வேறு ஏதாவது பிரச்னைகள் காரணமாகவோ அந்தக்குழு அமைக்கப்படவில்லை. இந்நிலையில் எழுத்துமூலமான அறிவித்தல் கூட இல்லாது வாய்வழி உத்தரவு மூலம் கொழும்பிலிருந்து கொடுக்கப்பட்ட மோசமான அழுத்தங்கள் காரணமாக அந்த 6 கிராமசேவகர் பிரிவுகளையும் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படையுங்கள் என வடக்கு காணி ஆணையாளர் அலுவலகத்தினால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஏற்கனவே, அங்கு முல்லைத்தீவு, வெலிஓயாபகுதிகளில் தமிழ் மக்கள் பலாத்காரமாக வெளியேற்றப்படு சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர் இந்நிலையில் தொடர்ந்தும் அபிவிருத்தி என்ற பெயரில் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை அந்தக் கிராமங்களை கைப்பற்றப் பார்க்கின்றது. இதுமுழுக்க முழுக்க சிங்களமயப்படுத்தும் நோக்கம்” என்றார்.

## கொரோனா...

களின் பிரதிநிதிகளுக்கும், கொரோனா ஒழிப்புக்கான தேசிய செயல்பாட்டு மத்திய நிலைய உறுப்பினர்களுக்கும் இடையிலான பேச்சு நேற்று மத்திய நிலைய காரியாலத்தில் இடம்பெற்றது.

இப்பேச்சின்போது மே தினக் கூட்டத்தை நடத்தாமலிருக்க எடுத்த தீர்மானத்துக்கு அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளும் இணக்கம் தெரிவித்தனர்.

தமிழ், சிங்கள புத்தாண்டு காலத்தில் பொது மக்கள் சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றாமல் பொறுப்பற்ற வகையில் செயல்பட்டதைக் காண முடிகிறது.

இதனால் அடுத்த நான்கு தொடக்கம் ஆறு வாரங்ளில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்கக் கூடும் என சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்பு விஷேட வைத்தியர் சுதத் சமரவீர குறிப்பிட்டுள்ளார்

இவ்வாறான பின்னணியில் மே தினக் கூட்டத்தை ஒன்றிணைந்து நடத்துவதா? அல்லது தனித்து நடத்துவதா? என அரசியல் கட்சிகள் பேச்சுகளில் ஈடுபட்டு வந்தன. மே தினக் கூட்டம் தொடர்பிலான பேச்சு கொரோனா வைரஸ் ஒழிப்புச் செயல்பாட்டு நிலையத்தில் இடம் பெற்றது.

தற்போதைய சுகாதார காரணிகளைக் கருத்தில் கொண்டு இம்முறை மே தினக் கூட்டம், பேரணி ஆகியவற்றை நடத்தாமலிருப்பது அவசியம் என செயல்பாட்டு நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா விடுத்த கோரிக்கைக்கு அனைத்து அரசியல் கட்சிப் பிரதிநிதிகளும் இணக்கம் தெரிவித்தனர். இதனடிப்படையில் மே தினக் கூட்டம் குறித்து அரசியல் கட்சிகள் ஏற்பாடு செய்திருந்த அனைத்து நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## ஜே.வி.பி. கடும்...

சில்வா நேற்று செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

தற்போதைய கொரோனா நிலைமை காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக இருந்திருந்தால் இதற்கு முன்னர் இடைநிறுத்தப்பட வேண்டிய பல நிகழ்வுகள் இடம்பெற்றன எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இது சுகாதார காரணங்களால் எடுக்கப்பட்ட முடிவு என தெரிவிக்க முடியாது என குறிப்பிட்ட ரில்வின் சில்வா, ஏனெனில் பேரணி தொடங்குவதற்கான திட்டங்களை அரசாங்கம் ஏற்கனவே செய்திருந்தது என்றும் சுட்டிக்காட்டினார்.

பேரணிகளில் அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்கள் தெரிவிக்கப்படும் என்ற அச்சத்தில் அரசாங்கம் இதை அனுமதிக்கவில்லை என தாம் சந்தேகிப்பதாகவும் ரில்வின் சில்வா குற்றம் சாட்டினார்.

## அரசியல்...

களில் பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெறவுள்ளது. இதற்கான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை எதிரணி கொண்டுவரவுள்ளது.

அதேவேளை, குறித்த அறிக்கையானது அரசியல் மயப்படுத்தப்பட்ட தொன்றாகும் என எதிரணிகள் சுட்டிக் காட்டியுள்ளன.

இக்குழுவில் உள்ள பரிந்துரைகள் அமுலாவதை தடுப்பதற்கு ஜே.வி.பி. நீதிமன்றத்தை நாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணத்தில்...

வித்தார். யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடங்களில் 643 பேரின் மாதிரிகள் நேற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போதே 7 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது.

இதில், திருநெல்வேலி பாரதிபுரம் கிராமத்தில் சுயதனிமைப்படுத்தலிலிருந்த 5 பேருக்கும் சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் சுயதனிமைப்படுத்தலில் இருவருக்கும் தொற்று கண்டறியப்பட்டது. (எ-03)

## மாகாணசபை...

சபைகளுக்கு தேர்தல்களை நடத்துவது உட்பட்ட நடவடிக்கைகள் மூலம் அதிகாரங்களை பகிர்வது குறித்த தனது அர்ப்பணிப்பை நிறைவேற்றவேண்டும் என்ற சர்வதேச சமூகத்தின் கோரிக்கையை இந்தியா ஆதரிக்கின்றது என இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். அ.தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினர் தம்பிதுரைக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் ஜெய்சங்கர் இதனை தெரிவித்துள்ளார்.

## இந்தியாவைப்...

பிராந்திய வல்லரசான இந்தியாவை பகைத்துக் கொண்டு எதனையும் செய்ய முடியாது எனவும் அவர் அரசுக்கு சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

வருடத்தில் ஒரு முறை கோப் மற்றும் கோபா தெரிவுக்குழுக்களிடம் துறைமுக நகரின் கணக்காய்வுகளை முன்வைக்க வேண்டும் என்ற சரத்தை கொண்டு வருமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

துறைமுக நகர விசேட ஆணைக்குழு சட்டமானது கறுப்புப் பணத்தை வெள்ளை பணமாக மாற்றும் உள்நோக்கத்தில் கொண்டு வரும் சட்டமாக இருக்கலாம் என வெளிநாடுகள் கூட சந்தேகம் வெளியிட்டுள்ளன.

அரசாங்கம் இலங்கையில் சீனா கால் பதிக்க இடமளித்து வருகிறது. பிராந்திய வல்லரசான இந்தியாவை பகைத்துக் கொண்டு எதனையும் செய்ய முடியாது எனவும் கிரியெல்ல குறிப்பிட்டார். (அ)

## 30 வருட...

வடபகுதியில் எத்தனை ஆலயங்கள் குண்டு வீசப்பட்டு தாக்கப்பட்டன, எத்தனையோ மக்கள் இறந்தார்கள். தமிழ் மக்கள் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்கள். அந்தவேளையில் தென் பகுதியில் இருந்து யாரும் எங்களுக்காகக் குரல் கொடுக்கவில்லை. எங்களுக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு நிச்சயமாக இருக்கின்றது.

அது உண்மைதான். இப்படியான ஒரு நிலையில் தென் பகுதியில் நடைபெற்ற ஒரு நிகழ்வுக்கு நாங்கள் ஏன் நினைவு நிகழ்வுகளை செய்யவேண்டும் என்று ஒரு கேள்வி பலரிடையே நிச்சயமாக இருக்கின்றது. ஆனால், சரியான ஒரு காரியத்தை ஒருவர் செய்யவில்லை என்பதற்காக சரியான ஒரு காரியத்தை நாங்கள் செய்யாமல் இருக்கக்கூடாது.

ஆண்டவர் இயேசு சொல்கிறார் - பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ அவற்றை எல்லாம் நீங்கள் அவர்களுக்குச் செய்யுங்கள் என்று. அதேபோல் அவர்களுடைய துன்பவேளைகளில் எங்களுடைய ஆதரவையும் ஒத்துழைப்பையும் கொடுக்கவேண்டியது கிறிஸ்தவ மக்களின் கடமையாகும். ஆகவே நாளைய தினத்தில் (இன்று) இந்த அஞ்சலி நிகழ்வுகளை நாங்கள் செய்து எங்கள் ஆதரவையும் அஞ்சலிகளையும் செலுத்துவதற்கு முன்வருவோம்.

இந்த வேளையிலே அரசாங்கத்திடம் நாங்கள் ஒரு கோரிக்கையை முன்வைக்க விரும்புகின்றோம். இந்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தோரை நினைவு கூர்வதற்கு அனுமதி வழங்கி அதற்கான பாதுகாப்புகளை நீங்கள் கொடுக்கிறீர்கள். அதற்காக நாங்கள் நன்றி சொல்கின்றோம்.

இதேபோல தமிழ் மக்கள் தங்களுடைய வாழ்க்கையில் 30 ஆண்டுகளாக அனுபவித்த போரின்பொழுது இறந்துபோன ஆயிரக்கணக்கான மக்கள், இறந்து போன இளைஞர், யுவதிகளையும் நினைவுகூர்ந்து அவர்களுக்கு அஞ்சலி செலுத்த எங்களுக்கு அனுமதி தரவேண்டும் -என்றார். (அ-2)

## யாழில் வாள்வெட்டு...

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அல்வாயைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான முருகராசா கௌசிகன் (வயது- 31) என்பவரே உயிரிழந்தார்.

அல்வாய் வடக்கு முத்துமாரி அம்மன் கோவிலடியில் உறவினர்களுக்கு இடையில் பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்னை நேற்று மதியம் வாய்த்தர்க்கமாக ஆரம்பித்து வாள்வெட்டில் முடிவடைந்தது என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்தது.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், தாக்குதலுடன் தொடர்புடைய நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்தனர். (எ-02-03)

## தடுப்பூசிக்கு...

உண்மையில்லை என அமைச்சரவை இணைப் பேச்சாளர், அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலம் காரணமாக கொரோனா தொற்று மீண்டும் அதிகரிப்பதற்கான ஆபத்து இருந்தாலும், அதைச் சமாளிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், இந்நிலைமை தொடர்பாக அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் குறிப்பிட்டார்.

## ஆளும் தரப்புக்குள்...

மத்திய குழு மற்றும் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என கட்சித் தலைவர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

‘சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு மற்றும் பாராளுமன்றக் குழு என்பன சுதந்திரக் கட்சி வழமையைப் போன்று மே தினக் கூட்டத்தை நடத்த வேண்டும் என்று தீர்மானித்துள்ளன. சுதந்திரக் கட்சியின் வரலாற்றை அவதானிக்கும் போது கீழ் மட்டத்திலுள்ள மக்களை உயர்மட்டத்துக்கு கொண்டு வந்தததும் சுதந்திரக் கட்சியாகும். எனவே, நாம் மே தினக் கூட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம்” என்றார்.

இந்நிலையில், மேதினக் கூட்டத்தை தனித்து நடத்தப்போவதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி நேற்று அதிரடியாக அறிவித்துள்ளமை ஆளும் கூட்டணிக்குள் தீவிரடைந்திருக்கும் முரண்பாடுகளை வெளிப்படுத்தியிருக்கின்றது. (எ)

## பேராயர் தனது...

போல, கர்தினாலுக்கும் அழுத்தங்கள் வழங்கப்பட்டனவா என மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் கீழான 5 ஒழுங்கு விதிகள் மற்றும் மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் முதல்நாள் வேறு விதமான கருத்தொன்றை வெளியிட்டிருந்தார். ஆனால் மறுநாள் ஊடகவியலாளர்களை சந்தித்து தனது கருத்து வேறுவிதமாக்கப்பட்டுள்ளதாக கூறி தான் அப்படிக்கூறவில்லை என தந்து முதல்நாள் கருத்தை திருத்தியுள்ளார். இதன்மூலம் விஜயதாஸ ராஜபக்ஷவை தொலைபேசியில் ஜனாதிபதி மிரட்டியதாகக் கூறப்படுவதுபோல, கர்தினலுக்கும் அழுத்தங்கள் வழங்கப்பட்டனவா என மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளது - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது...!

மாகாண சபைகளுக்கு தேர்தல் நடைபெறுமா இல்லையா என்பது குறித்து சந்தேகங்கள் தொடர்ந்து நிலவினாலும் யார் வடக்கின் முதலமைச்சர் என்பது குறித்த விவாதம் நம்மவர் மத்தியில் உச்சம் பெற்றிருக்கின்றது.

மாவைக்கு தகுதியில்லை என்பதாலேயே தன்னை வேட்பாளராக்கினார் சம்பந்தன் என்று விக்னேஸ்வரன் பத்தி வைத்த நெருப்பு தீயாய் எரிந்து கொண்டிருக்கின்றது. தன்னிலும் பார்க்க மாவை தகுதியானவர் இல்லை என்று விக்கி சொன்னது மாவையைப் பொறுத்தவரை அவருக்கு வெற்றிதான். அவரது தகுதி பற்றியும் அதைச் சொல்ல விக்னேஸ்வரனுக்கு இருக்கும் 'தகுதி' பற்றியும் பட்டிமன்ற விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. மாவை ஒன்றும் குறைந்தவர் அல்ல என்று விக்னேஸ்வரனின் கூட்டணியைச் சேர்ந்த சிவாஜிலிங்கமே உரத்துக் குரல் கொடுத்திருக்கிறார்.

நம்மவர்கள் மத்தியில் இப்படிப் பிரச்னை போய்க்கொண்டிருக்க, அரச தரப்பிலோ எப்படி மாகாண சபை தேர்தலை நடத்துவது என்பது குறித்து யுத்தமே நடந்து கொண்டிருக்கின்றது. ஆளும் பொதுஜன பெரமுன கட்சி மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த முன்வைத்திருக்கும் யோசனையை ஆளும் கூட்டணியிலுள்ள கட்சிகள் பலமாக எதிர்ப்பைப் பதிவுசெய்திருக்கின்றன.

மாகாண சபைகளுக்கான உறுப்பினர்களை எழுபது வீதம் தொகுதிவாரியாகவும், மிகுதி முப்பது வீதம் விகிதாசார அடிப்படையிலும் தெரிவுசெய்யும் வகையிலான தமது யோசனையை பொதுஜன பெரமுன முன்வைத்திருக்கின்றது.

இப்போது மாகாணத்தில் அதிக வாக்குகளைப் பெறும் கட்சிக்கு இரண்டு போனஸ் உறுப்பினர்கள் என்பதை மாவட்டத்திற்கு இருவர் என்று மாற்றவும் இந்த யோசனை பரிந்துரைத்திருக்கின்றது. இதன்படி பார்த்தால் வடக்கு மாகாணத்திற்கு ஐந்து மாவட்டங்களுக்குமாக பத்து போனஸ் ஆசனங்கள் கிடைக்கும்.

கடந்த பாராளுமன்ற தேர்தல் முடிவுகளின்படி பார்த்தாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அதிக வாக்குகளைப் பெற்றிருந்தது. தொகுதி வாரியாகப் பார்த்தாலும் கூட்டமைப்பு யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள இரண்டு தொகுதிகளில் மாத்திரமே தோல்வியடைந்தது. மற்றைய அனைத்து தொகுதிகளிலுமே கூட்டமைப்பே வெற்றி பெற்றிருந்தது.

இதனை எழுதும்போதுதான் ஒரு விடயமே ஞாபகத்திற்கு வருகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் கூட்டமைப்பு சார்பில் மூவர் வெற்றி பெற்றிருந்தார்கள். அவர்களில் இருவர் ஓரணியாக தேர்தலைச் சந்தித்தவர்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டு தொகுதிகளில் கூட்டமைப்பு தோல்வி அடைந்தது என்பதை மேலே குறிப்பிட்டிருந்தோம். ஒரு தொகுதி தீவுப்பகுதி. கூட்டமைப்பின் சார்பில் தீவுப்பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தி களத்தில் நின்றவர் சிவஞானம் சிறிதரன். அவரது பூர்வீகம் தீவுப்பகுதி என்பதால், அங்கிருந்து வேறு ஒருவர் களமிறங்குவதை அவர் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி எப்படியும் தடுத்துவிடுவார்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சுமார் ஒரு இலட்சம் வாக்குகளைக் குறிவைத்து அங்கிருந்து ஒரு வேட்பாளரே கூட்டமைப்பின் சார்பில் களமிறங்குவதையும் அவர் உறுதிப்படுத்திவிடுவார். அதனால்தான் அவர் ஒரு மாவட்டத்தின் ஒட்டுமொத்த வாக்குகளிலும் தீவுப்பகுதி வாக்குகளையும் சேர்த்து வெற்றிபெறுவது சுலபமாகி விடுகின்றது. அவரது இந்த வெற்றியின் இரகசியம் பற்றி பின்னர் ஒருதடவை விரிவாகப் பார்ப்போம்.

ஆனால், அவர் களமிறங்கிய தீவுப்பகுதியில் கூட்டமைப்பு தோல்வி அடைந்தது. மாவட்டத்தில் கூட்டமைப்பு தோல்வி அடைந்த மற்றுமொரு தொகுதி உடுப்பிட்டி. கூட்டமைப்பின் ஆல்இன்ஆல் சுமந்திரனின் சொந்தத் தொகுதி. இந்தத் தொகுதியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் வெற்றி பெற்றதுடன், கூட்டமைப்பு இரண்டாவது இடத்தைக்கூடப் பெறமுடியவில்லை.

இதனால்தான், தேர்தல் முடிவு வெளியிடப்பட்டபோது, வாக்குகள் எண்ணப்பட்ட யாழ். மத்திய கல்லூரி முன்றலில் கூடியிருந்த சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள், முடிவு வெளியிடப்பட்டபோது, பிரபாகரனின் சொந்த இடத்தை தாங்கள் கைப்பற்றினோம் என்று பட்டாசு கொழுத்தி மகிழ்ச்சி தெரிவித்தார்கள்.

தேர்தலுக்கு முன்னதாக- சிங்கள இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டி ஒன்றில், சுமந்திரன் ஆயுதப் போராட்டத்தை தான் ஆதரிக்கவில்லை என்று வழங்கிய சர்ச்சைக்குரிய பேட்டியைத் தொடர்ந்து ஏற்பட்ட சலசலப்பும் அவரது இந்தத் தோல்விக்கு காரணமாக இருந்திருக்கலாம். இலட்சம் வாக்குகளைப் பெற்று வெற்றிபெறுவேன் என்று நம்பிக்கொண்டிருந்த சுமந்திரனால், தனது சொந்தத் தொகுதியிலேயே வெல்ல முடியாமல் போயிருந்தது.

இப்போது கட்சியில் யாழ். மாவட்டத்தில் நானே அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றேன் என்று அவர் சொல்லிக் கொண்டாலும், சொந்த தொகுதியில் தோற்றமே என்ற அவப்பெயர் தொடரவே செய்யும். இப்போது, மாகாண சபைகளுக்கு தொகுதிவாரியாக தேர்தல் நடந்தால் அந்த தொகுதியில் தனது வேட்பாளர் ஒருவரை நியமித்து அவரை வெல்ல வைப்பதன் மூலம் இந்த அவப்பெயரை போக்க முயற்சிக்க வேண்டும்.!

**- ஊர்க்குருவி.**

# வலைத்தளங்களுக்கு கிடுக்கிப்பிடி: அமைச்சரவை அனுமதி அளித்தது!

**கொழும்பு, ஏப். 21**

**இணையத்தளங்களூடாக பகிரப்படும் பொய்யான, மக்களை திசைதிருப்பும் வகையிலான வதந்திகள் குறித்து தேவையான நடவடிக்கையை முன்னெடுக்கும் வகையில் சட்டத்தை தயாரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

இணையத்தளங்களூடாக முன்னெடுக்கப்படும் பொய் பிரசாரங்களால் ஏற்படக்கூடிய பிரச்னைகளிலிருந்து சமூகத்தை பாதுகாக்க புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதனூடாக சரியான தகவல்களை மக்கள் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு தேவையான சட்ட மூலத்தை தயாரிப்பதற்கு, சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்க நீதி அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் ஆகியோர் இணைந்து சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இணையத்தளங்களூடாக பொய்யான தகவல்களை பரப்புதல், மோசமான அச்சுறுத்தல்களை ஏற்படுத்துதல் மூலம் சமூகத்தை பிளவுபடுத்தல், வெறுப்புணர்வை பரப்புதல், ஜனநாயக நிறுவனங்களை பலவீனப்படுத்துதல் என்பன இடம்பெறுகின்ற என்று கண்டறியப்பட்டுள்ளது.

இந்த பிரச்னைக்கு தீர்வு காண்பதற்காக பல நாடுகள் சட்டங்களை வகுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன என்று அமைச்சரவை தீர்மானங்கள் தொடர்பான அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

## வீடமைப்பு அதிகார சபை தலைவர் பதவி விலகல்!

கொழும்பு, ஏப். 21

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பதவியிலிருந்து ரேணுக பெரேரா இராஜினாமா செய்துள்ளார்.

துறைசார் அமைச்சரின் அழுத்தங்கள் காரணமாக இந்த தீர்மானத்தை தாம் எடுத்தார் என்று ரேணுக பெரேரா, பிரதமருக்கு அனுப்பியுள்ள இராஜினாமா கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பதில் பொது முகாமையாளர் பதவிக்கு கணக்காய்வின் போது குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவரை நியமிக்குமாறு தொடர்ச்சியாக விடுக்கப்பட்ட அழுத்தங்களுக்கு தான் இணங்கவில்லை என ரேணுக பெரேரா கூறியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பிரதமர் மற்றும் செயலாளருக்கு அறிவித்தார் என்றும் அவரது இராஜினாமா கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊழலில் ஈடுபட்ட அதிகாரிகளுடன் பணியாற்ற முடியாது என தெரிவித்து தாம் இராஜினாமா செய்தார் என தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரேணுக பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த இராஜினாமா கடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதி, ஜனாதிபதியின் செயலாளர், அமைச்சின் செயலாளர் மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.



## இலங்கை கடற்பரப்பில் மீன் வள ஆய்வை நோர்வே ஆரம்பித்தது!

கொழும்பு, ஏப். 21

இலங்கை கடற்பரப்பில் மீன் வள ஆய்வுகளை மேற்கொள்வதற்கான இணைந்த வேலைத்திட்டம் ஒன்றை கடற்றொழில் அமைச்சு மற்றும் இலங்கைக்கான நோர்வே தூதரகம் ஆகியன இணைந்து நேற்று ஆரம்பித்துள்ளன.

மாளிகாவத்தையில் கடற்றொழில் அமைச்சில் இடம்பெற்ற இந்த நிக்வில், இலங்கைக்கான நோர்வே தூதுவர் ரைன் ஜோன்லி ஸ்கெண்டல், கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் கஞ்சன விஜேசேகர, கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி. இந்து ரத்னாயக்க மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

கடற்றொழில் துறையில் இலங்கையும் நேர்வேயும் நீண்டகால பரஸ்பர உறவுகளைக் கொண்டிருப்பதுடன் கடற்றொழிலாளர்கள் வாழ்வாதாரம் மற்றும் உள்நாட்டு பொருளாதாரம் ஆகியவற்றையும் உறுதி செய்வதிலும் கவனம் செலுத்துகின்றன.

அதுமட்டுமல்லாது அதிகளவு கடல் வளங்களைக் கொண்ட தீவாக இலங்கை காணப்படுவதால் அந்த வளங்களை நிலைபேறான வகையில் பேணுவது அரசாங்கத்தின் குறிக்கோளாக உள்ளது - என்றார். (ஐ)

## உள்ளூராட்சி வீதிகள் அனைத்தும் விரைவில் ஆவணமாக்கப்படும்!

### வடக்கு ஆளுநர் சார்ள்ஸ்



மானிப்பாய், ஏப். 21

ஜி.பி.எஸ். மூலம் அளவை செய்யப்பட்டு முழு மையாக தொகுக்கப்பட்ட உள்ளூராட்சி சபை வீதிகள் அனைத்தும் விரைவில் வர்த்தமானியில் பிரசுரித்து முழுமையான ஆவணமாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை உட்பட 34 உள்ளூராட்சி சபைகளும் அண்மையில் ஜி.பி.எஸ். அளவைத் திட்டத்தின் ஊடாக சபைக்கு உட்பட்ட வீதிகள், சிறு ஒழுங்கைகள் என்பவற்றின் நீளம், அகலம், வீதியின் ஆரம்பம், முடிவிடம் உள்ளிட்ட விபரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தொகுக்கப்பட்ட வீதிகளின் விபரங்கள் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு ஏதுவாக விரைவில் என்னால் அனுமதி வழங்கப்படும். எனவே, அனைத்து உள்ளூராட்சி சபைகளும் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு ஏதுவாக விரைந்து செயல்படுமாறு அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர், செயலாளர்களை வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் பணித்துள்ளார். (ஐ-5)




**காலை**

5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

**பகல்**

1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
21.04.2021 புதன்கிழமை
சார்வரி, சித்திரை 08

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# இந்தியாவின் எதிர்பார்ப்பு ஈடேறுமா?

ஆளும் பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களுக்கிடையிலான கூட்டம் சுமூகமாக இடம் பெறவில்லை. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற கூட்டமானது, தோல்வியில் முடிந்திருப்பதாகவே தெரிகின்றது. பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான விமல்வீரவன்ஸ, உதயகம் மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் கூட்டத்தை பகிஷ்கரித் திருக்கின்றனர். மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பிலும் குறித்த கூட்டத்தில் ஆராயப்படவிருந்தது. இவ்வாறானதொரு நிலையிலேயே கூட்டம் எதிர்பார்த்ததுபோன்று சுமூகமாக இடம்பெற வில்லை. ஆளும் தரப்பிற்குள் பாரதூரமான முரண்பாடொன்று ஊசலாடிக்கொண்டிருக்கின்றது என்னும் சந்தேகம் நிலவுகின்றது. சில தினங்களுக்கு முன்னர், பங்காளிக் கட்சிகளின் தலைவர்களில் ஒருவரான உதயகம்மன்பில, அரசாங்கத்திற்குள் இருக்கும் ஒரு பலமான நபரே அனைத்து முரண்பாடுகளுக்கும் காரணமென்று தெரிவித்திருந்தார். அது யார், மஹிந்த ராஜபக்ஷவா அல்லது பஸில் ராஜபக்ஷவா?

ஆளும் தரப்பிற்குள் முரண்பாடுகள் இடம்பெற்றுவருகின்ற நிலையில், மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் இறுதி முடி வெடுப்பதிலும் நெருக்கடிகள் தோன்றக்கூடும். இவ்வாறானதொரு பின்புலத்தில் இலங்கை மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தவேண்டுமென்று இந்தியா எதிர்பார்ப்பதாக இந்திய வெளி விவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் தெரிவித்திருக் கின்றார். மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது உள்ளடங்கலாக, அதிகாரங்களை பகிர்வது தொடர்பிலான உறுதிப்பாட்டை இலங்கை காண்பிக்கவேண்டுமென்னும் சர்வதேச சமூகத்தின் கோரிக்கையை இந்தியா ஆதரிப்பதாகவும் ஜெய்சங்கர் தெரிவித்திருக்கின்றார்.

ஆனால், ஆளும் தரப்பிற்குள் இடம்பெற்றுவரும் முரண்பாடுகளை உற்றுநோக்கினால், மாகாண சபைத் தேர்தல்களை இந்த ஆண் டில் நடத்துவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் மங்கலாகவே தெரிகின் றது. தற்போது இடம்பெற்றுவரும் முரண்பாடுகளின் மத்தியில், மாகாண சபைத் தேர்தலுக்கான புதிய முறைமை தொடர்பில் உடன்பாடுகளை எட்டுவதில் இழுபறிகள் ஏற்படக்கூடும். இதனால் மேலும் காலதாமதம் ஏற்படலாம். ஆனால், இலங்கையின்மீது நிறை வேற்றப்பட்டுள்ள புதிய பிரேரணையிலும், மாகாண சபைத் தேர்தல் களை விரைவாக நடத்துமாறு வலியுறுத்தப்பட்டிருக்கின்ற நிலையில், தொடர்ந்தும் மாகாண சபைத் தேர்தல்களை அரசாங்கத்தினால் பிற்போட்டுக்கொண்டு செல்லமுடியுமா? சர்வதேச சமூகத்திற்காக அல்லது இந்தியாவிற்காக இதனைச் செய்யாதுவிட்டாலும்கூட, இலங்கைக்குள் சில விடயங்களை நாங்கள் முன்னெடுத்து வருகின் றோம் என்பதைத் நிரூபிக்கும் வகையிலாவது, மாகாண சபைத் தேர்தலை நடத்தவேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்திற்குண்டு. ஏனெனில், மாகாண சபைத் தேர்தலை பிற்போடுவதற்கான எந்தவொரு வலுவான காரணமும் அரசாங்கத்திடம் இல்லை.

பெரும்பான்மை பலத்துடன் அதிகாரத்தை கைப்பற்றியிருந்த நிலையில், அரசாங்கத்திலுள்ள ஒரு சிலர், 13ஆவது திருத்தசட்டம் தொடர்பில் தெரிவித்துவந்த கருத்துக்கள் வலுவிழந்துவிட்டன. அரசாங்கத்தின் தற்போதைய நெருக்கடி நிலைமை, அனைவரையும் வாய்மூடச் செய்துவிட்டது. அதேவேளை, இந்தியா மிகவும் இறுக்க மான வகையில் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில் ஜெனிவாவில் தெரிவித்திருந்த கருத்துக்கள், அரசாங்கம் நினைத்தாற்போல் சில விடயங்களை கையாள முடியாதென்னும் நிலைமையையும் தோற்றுவித்திருக்கின்றது. இவ்வாறானதொரு சூழலில்தான், இந்தியா மீளவும் மாகாண சபைத் தேர்தல்களை விரை வாக நடந்துவது தொடர்பில் தனது கரிசனையை வெளிப்படுத்தியிருக் கின்றது. உண்மையில், மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு கூறு வதற்கான உரித்து இந்தியாவிற்குண்டு. ஆனால், மாகாண சபை தேவை யான தமிழர் தரப்புக்கள், அது தொடர்பில் பொதுவெளியில் தமது நிலைப்பாடுகளை ஆணித்தரமாக முன்வைக்கவேண்டும். மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்தை கோரவேண்டும்.

# கிழக்கிலிருந்து வரும் காலனித்துவம்!

- அலசுவது இராஜதந்திரி -

*இலங்கை காலனித்துவ ஆட்சிக் குட்பட்ட ஒரு நாடாகும். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என மேற்கே ஐரோப்பாவிலிருந்து வந்த காலனித்துவ ஆட்சியாளர்கள் இலங்கையை ஆண்டிருந்த னர். இறுதியாக, ஆங்கிலேயர்கள் முழு நாட்டையும் கைப்பற்றி 133 ஆண்டுகள் ஆட்சி செய்திருந்தனர். இக்காலப்பகுதியி லேயே இலங்கை அரசியல், சமூக, பொருளா தார ரீதியான மாற்றங்களை பாரிய அளவில் கண்டிருந்தது.*

*இலங்கை பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திர மடைந்து 70 ஆண்டுகளை கடந்துள்ளபோதி லும், வெளிநாடுகளையே பெரிதும் தங்கிவாழும் நிலையிலிருக்கின்றது. கடந்த இரு தசாப்த காலங்களில் உலகில் பாரியள விலான மாற்றங்கள் ஏற்பட்டு புதிய நாடுகள், புதிய எல்லைகள் மற்றும் வியத்தகு அரசியல், பொருளாதார மாற்றங்கள் என பல்வேறு மாற்றங்கள் உலகளாவிய ரீதியல் ஏற்பட்டிருக்கக் காணப்படுகின்றன.*

**சர்வதேச ரீதியான மாற்றங்கள்**

*அன்றைய சோவியத் யூனியன் பிளவு பட்டு, இன்று பல்வேறு நாடுகள் உருவாகியுள் ளன. மேற்கு, கிழக்கு என பிளவுபட்டிருந்த ஜேர்மனி தற்போது ஒரே நாடாக உருமாறி யுள்ளது. மேற்குலகில் மட்டுமல்ல. கிழக்கே சீனாவில் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியான மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கக் காணப்படுகின்றது.*

*‘மூங்கில் திரை’ நாடு என்று வர்ணிக்கப் பட்டிருந்த சீனாவில் அரசியல், பொருளாதார ரீதியான மாற்றங்கள் பெரிதும் ஏற்பட்டுள் ளன. சீனா கம்யூனிஸ போக்கிலிருந்தும் விலகி, சோஷலிச போக்குடைய நாடாக மாற்றங்கண்டுள்ளது. முன்னர் வெளி உலக தொடர்புகளற்றிருந்த சீனாவில் இன்று மிகப் பிரபலமான அனைத்துவகை பொருட்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. சீனாவினு டைய பொருளாதார ரீதியான வளர்ச்சி பிரமிக்கத்தக்கதாக இருக்கின்றது. அபிவி ருத்தி கண்ட மேற்குலக நாடுகளே பிரமித்துப்போகுமளவுக்கு சீனா பொருளா தார ரீதியான வளர்ச்சியை பெரிதும் எட்டி யுள்ளது.*

*இந்நிலையில் மேற்குலக நாடுகள் அரசி யல், இராணுவ ரீதியாக தமது காலனித்துவ ஆதிக்கத்தை நலிவுற்ற நாடுகளில் நிலை நிறுத்தியது போலன்றி, பொருளாதார ரீதியாக சீனா தனது ஆதிக்கத்தை விஸ்தரித்து வருவதையே காணமுடிகின்றது.*

**நவ காலனித்துவம்**

*சீனாவின் பொருளாதார ரீதியான ‘நவ காலனித்துவ’த்துக்குட்பட்டுள்ள நாடுகளில் முக்கியமானதாக இலங்கை விளங்குகின்றது. இலங்கை தவிர, ஆபிரிக்க நாடுகள் பலவற்றி லும் சீனாவின் கை ஓங்கியுள்ளது. மேற்குலக காலனித்துவ ஆட்சியாளர்கள் தாம் கட்டுப் பாட்டின் கீழ் வைத்திருந்த நாடுகளின் வளங்களை சுருட்டி தமது கைவரிசையைக் காண்பித்திருந்தனர். ஆனால் சீனா பொருளா தார ரீதியாக பெரிதும் உதவுவதன் மூலம் தனது அரசியல், பொருளாதார செல்வாக்கினை தன்னைச் சார்ந்துள்ள நாடு களில் செலுத்த முற்படுவதையே அவதானிக்க முடிகின்றது.*

*சீனாவின் செல்வாக்கிற்குட்பட்ட ஒரு முதன்மை நாடு என்று கூறப்படுமளவுக்கு இலங்கை காணப்படுகின்றது. இலங்கையின் தலைநகர் கொழும்பில் அமைக்கப்பட்டு தற்போது பூர்த்தியடைந்துவரும் கொழும்பு துறைமுகநகர் அபிவிருத்தித்திட்டம், சீனா வின் நவகாலனித்துவ விஸ்தரிப்புக்கு நல்லதோர் உதாரணமாக இருப்பதுடன், இலங்கையின் புவியியல் வரைபடத்திலேயே தலைநகரில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்து வதாக சீனாவின் இப்பாரிய நிர்மாணம் விளங்குகின்றது.*

**சிம்ம சொப்பனம்**

*ஆயினும், மறுபுறத்தே சீனாவுடன் சரிசம பலத்தைப் பேணுவதில் முனைப்புடனிருக்கும் இந்தியா மற்றும் சீனாவின் அதிக்க விஸ்தரிப்பை ஆசியாவில் கட்டுப்படுத்த வேண்டுமென கங்கணம்கட்டி நிற்கும் மேற் குலக நாடுகளுக்கு இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் சிம்ம சொப்பனமாகவே இருக்கின் றது. ஏற்கனவே கிழக்காசிய கடல்பகுதியில் மேற்குலக நாடுகளான அமெரிக்கா, பிரான்ஸ் என்பவை இந்தியாவுடன் சேர்ந்து கடற்படை பயிற்சிகளை அண்மைக் காலங்களில் அடிக்கடி நடத்தி வருகின்றன. அத்துடன், இந்தியா சுயமாகவே போர்த்தளபாட உற்பத்திகளில் தற்போது ஆர்வம் காட்ட முற்படுவதோடு, அண்மைக்காலங்களில் போர் விமானங்களை பிரான்ஸிடமிருந்து வாங்கிவருகின்றது. இதுதவிர, இஸ்ரேலிட மிருந்தும் நவீன யுத்த தளபாடங்களை இந்தியா கொள்வனவு செய்வதோடு அமெரிக் காவிடமிருந்தும் இராணுவ தளபாடங்களை இந்தியா பெற்று வருகின்றது.*

*இருந்தபோதிலும், சீனா தனது அயல்நாட் டுக் கொள்கைகளை வகுப்பதிலும் தனது இராணுவ மற்றும் பொருளாதார கட்டமைப் புகளைப் பேணுவதிலும் எவரையும் சார்ந்தி ராது, தனக்கேயுரிய பாணியில் சென்று கொண்டிருப்பதையே அவதானிக்க முடிகின் றது.*

*இந்நிலையில், இந்தியாவோ அல்லது அதனைச் சார்ந்த மேற்குலக நாடுகளோ சீனாவின் செல்வாக்கு ஆசியப் பிராந்தியத்தில் அதிகரித்துவருவது குறித்து தமது அதிருப்தியை வெளியிடலாம். ஆனால், சீனா இராணுவ, பொருளாதார ரீதியாக அசுரத்தன மான பலத்தைக் கொண்டுள்ள நிலையில், அதனைச் சார்ந்துள்ள நாடுகள்மீது அழுத்தங் களை பிரயோகிப்பதன் மூலம் தமது நலன்களை பெரிதும் பாதுகாக்க முடியாதென்றே கருதலாம்.*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் 21 புதன்கிழமை
பிலவ வருடம் - சித்திரை 8
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 1.30
திதி : நவமி



## இன்றைய ராசிபலன்

21.04.2021

**மேடம்**
உபயோகமற்ற விஷயங்களை நினைக்காமல் விலக்குவது நல்லது. மனச்சாட்சிப்படி நடப்பதால் மகிழ்ச்சி ஏற்படும். நிம்மதியான நாள். எதையும் ஆரா யாமல் ஏற்க வேண்டாம். உறவுகளை சந்திப்பீர்கள்.

**இடபம்**
யோகமான நாள். எண்ணங்கள் எளிதில் நிறை வேறும். நிதிநிலை உயர்வதற்காக நீங்கள் எடுத்த முயற்சி வெற்றி பெறும். குடும்பத்தில் புதிய பொருள் சேர்வதற்கான முயற்சி எடுப்பீர்கள்.

**மிதுனம்**
பகையொன்று நட்பாகும். குடும்பத்தில் கலகலப்பு அதிகரிக்கும். பணியாளர்கள் பின்விளைவுகளை அறிந்து செயல்படுவது நல்லது. மகிழ்ச்சியான நாள். உங்களுக்கான முக்கியத்துவம் அதிகரிக்கும்.

**கடகம்**
நல்லவர்களைப் பகைத்துக் கொள்வது தப்பு என் பதை உணர்வீர்கள். எண்ணிய விஷயங்கள் சிறப் பாக நடைபெறும். பொறுப்பு அதிகரிக்கும். குடும்ப விஷ யங்களை பிறரிடம் பகிர வேண்டாம். மனநிம்மதி.

**சிம்மம்**
மகிழ்ச்சியான நாள். குடும்பத்தில் உள்ள ஒருவரின் மதிப்பு உயரும். நெருக்கமானவர்களின் தேவை கள் தெரியவரும். பிறருக்கு உதவுவீர்கள். மற்றவர்க ளின் மனம் நோகக்கூடாது என்ற கவனம் தேவை.

**கன்னி**
பெண்களுக்குக் குதூகலம் அளிக்கும் விஷயம் ஒன்று நடக்கும். நட்பு வட்டம் விரிவடையும். சகோதரர் களால் உதவி கிடைக்கும். மனதுக்கு நெருக்கமான வருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும்.

**துலாம்**
விரதம், வழிபாடுகளில் ஈடுபாடு கூடும். சிறப்பான விருது வரும். பரபரப்பான நாள். உறவினருடன் பகை ஏற் படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். உங்களின் முயற்சி யால் போட்டி, பந்தயங்களில் அதிர்ஷ்டம் அடிக்கும்.

**விருட்சிகம்**
பணியாளர்கள் புது உத்வேகத்துடன் செயல்பட்டுப் பாராட்டுப் பெறுவீர்கள். உடல்நலத்தில் கவனம் செலுத்து வீர்கள் என்பதால் நலமடைவீர்கள். விரும்பிய விஷயம் நடைபெறும். பிள்ளைகளால் மகிழ்ச்சி கிடைக்கும்.

**தனுசு**
திட்டமிட்டபடி சில பொருட்களை வாங்குவீர்கள். மன தில் நிம்மதி கூடும். வெற்றி பெறும் எண்ணத்தில் தவறான வழியைத் தேர்ந்தெடுக்க வேண்டாம். இன்று வேலை விஷயமாக நற்செய்தி ஒன்று வரலாம்.

**மகரம்**
பெண்களுக்குச் சந்தோஷமான அனுபவங்கள் இன்று ஏற்படும். தள்ளிப்போட்ட விஷயங்களை முடிக்கும் நாள். நட்பு வட்டம் விரியும். வெளிநாட்டி லிருந்து பணிக்கு அழைப்பு வரும். மகிழ்ச்சி கூடும்.

**கும்பம்**
உங்கள் முயற்சி காரணமாக இன்று அலுவலகப் பிரச்னைகள் தீரும். சுற்றியிருப்பவர்கள் உங்களைக் குழப்புவதற்கு அனுமதிக்க வேண்டாம். குழந்தைக ளுக்காக அலைந்து திரிந்த பிறகே பலன் கிடைக்கும்.

**மீனம்**
பழைய சம்பவங்களை அசைபோடும்படியான நபர் களைச் சந்திப்பீர்கள். உங்களின் சுய திறமை கள் வெளிப்படுவதால் வெற்றியும் பாராட்டும் உண்டு. மனம் மகிழும் நாள். பணியில் புதிய உத்திகள் தோன்றும்.

# வைத்தியசாலையில் இருந்து வீடு திரும்பினார் தமிழக முதலமைச்சர்



சென்னை, ஏப். 21

தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி வீடு திரும்பியுள்ளார்.

தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமிக்கு நேற்று முன் தினம் காலையில் திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டதால், சென்னை அமைந்தகரை நெல்சன் மாணிக்கம் வீதியில் உள்ள எம்.ஜி.எம். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில், அவருக்கு குடல் இறக்கம் நோய் (ஹெர்ணியா) இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதை தொடர்ந்து அவருக்கு லப்ரஸ்கோப் கருவி மூலம் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து, நேற்று காலை அவர் பூரண குணமடைந்தவுடன் வைத்தியசாலையில் இருந்து வீட்டுக்கு திரும்பினார்.

# கொரோனா கட்டுப்பாடுகளை மக்கள் முறையாகப் பின்பற்றுவது அவசியம்

## ஸ்டாலின் கோரிக்கை



சென்னை, ஏப். 21

கொரோனா பரவலை தடுப்பதற்காக அரசு விதித்துள்ள அனைத்து கட்டுப்பாடுகளையும் மக்கள் முறையாக பின்பற்ற வேண்டும் என தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

செவ்வாய்க்கிழமை இரவு முதல் இரவு நேர ஊரடங்கை அரசு அறிவித்துள்ளது. தினமும் இரவு நேரம் முழுவதும் ஊரடங்கு போடப்பட்டுள்ளது. ஞாயிற்றுக்கிழமைகளில் முழு ஊரடங்கு போடப்பட்டுள்ளது.

அவசியப் பயன்பாட்டு விஷயங்கள் நீங்கலாக மற்றவை அனைத்தும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. அரசு விதித்துள்ள கட்டுப்பாடுகள் அனைத்தையும் மக்கள் முறையாக பின்பற்ற வேண்டும்.

இந்த ஊரடங்கு காலத்தில் அவசிய பயன்பாட்டுக்காக மட்டுமே வெளியில் வந்து செல்லுங்கள். மற்ற நேரங்களில் வீட்டில் பாதுகாப்பாக இருங்கள். ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்ளுங்கள்.

மீண்டும் வாழ்வாதாரத்தை இழக்கும் சூழலுக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள். அவர்களது வாழ்க்கை சூழலையும் அரசுகள் மனதில் வைத்து நலத் திட்ட உதவிகள், நிவாரணங்களை செய்துத்தர வேண்டும்” எனத் தெரிவித்துள்ளார்.

# வாக்கு இயந்திரங்கள் உள்ள பகுதிகளில் மர்ம நபர்களின் நடமாட்டங்கள் அதிகம்

## கமல்ஹாசன் முறைப்பாடு

சென்னை, ஏப். 21

மின்னணு வாக்கு இயந்திரங்கள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள மையங்களில் மர்ம நபர்களின் நடமாட்டம் அதிகமாகி இருப்பதாக மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இது குறித்து தமிழக தேர்தல் அதிகாரியிடம் முறையிடப் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், ‘ வாக்கு இயந்திரங்கள் உள்ள அறையின் அருகில் வைபை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மடிக் கணனிகள் மற்றும் மர்ம நபர்களின் நடமாட்டமும் அதிகமாகவுள்ளது.

இத்தகைய சம்பவங்கள் தேர்தல் விதி மீறல் மட்டுமல்ல. ஜனநாயகத்திற்கு ஆபத்தானவை. மின்னணு வாக்கு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பகுதிகளில் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும்’ எனத் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் அதிகளவான தடுப்பூசி டோஸ்கள் வீணாகியுள்ளதாக தகவல்

சென்னை, ஏப். 21

நாடு முழுவதும் 44 இலட்சம் கொரோனா தடுப்பூசி டோஸ்கள் வீணாகியுள்ளன என்று தகவல் அறியும் உரிமை சட்டம் தெரிவித்துள்ளது.

அதில் அதிகபட்சமாக தமிழகத்தில் 12.10 சதவீத டோஸ்கள் வீணாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் கொரோனா பாதிப்பு அதிகரித்துவரும் நிலையில், தற்போது 45 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் எதிர்வரும் மே முதலாம் திகதி முதல் 18 வயது நிரம்பிய அனைவரும் தடுப்பூசி செலுத்திக் கொள்ளலாம் என மத்திய அரசு நேற்று அறிவித்தது.

இதனையடுத்து, மாநில அளவில் வீணான கொரோனா தடுப்பூசி டோஸ்கள் குறித்து தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் கேட்கப்பட்ட கேள்விக்கு மத்திய அரசு பதிலளித்துள்ளது.

அதன்படி, ஏப்ரல் 11ஆம் திகதி நிலைவரப்படி, இந்தியாவில் பயன்படுத்தப்பட்ட 10 கோடியே 34 இலட்சம் டோஸ்களில், 44 இலட்சத்து 78 ஆயிரம் டோஸ் மருந்துகள் வீணாகி இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவற்றில் நாட்டிலேயே தமிழகத்தில்தான் அதிகமான டோஸ்கள் வீணாகியுள்ளன எனத் தெரியவந்துள்ளது.

தமிழகத்தில் 12.10 சதவீதமும் ஹரியானாவில் 9.74 சதவீதமும் பஞ்சாபில் 8.12 சதவீதமும் மணிப்பூரில் 7.8 சதவீதமும் தெலுங்கானாவில் 7.55 சதவீதமும் தடுப்பூசி டோஸ்கள் வீணாகியுள்ளன.

குறைவான அளவில் டோஸ்கள் வீணடித்துள்ள மாநிலங்களாக கேரளா, மேற்கு வங்கம், இமாச்சலப் பிரதேசம், மிசோரம், கோவா, டாமன் - டையு, அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள், லட்சத்தீவுகள் ஆகியவை உள்ளன.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன காலனித்துவம் ஏற்படுமாயின் அதனை கடுமையாக எதிர்ப்போம்

## மஹிந்த அமரவீர கூறுகிறார்

**கொழும்பு, ஏப். 21**

**விஜயதாஸ ராஜபக்ஷ கூறுவதைப்போன்று இலங்கை சீனாவின் காலனித்துவ நாடாக மாறுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரியவில்லை. எனினும் அத்தகைய நிலையொன்று ஏற்படுமாயின், நாம் அதனைக் கடுமையாக எதிர்ப்ப தற்குத் தயாராக இருக்கின்றோம் என்று சுற்றாடல் அமைச் சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அலரிமாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற சந்திப்பின் போது குறிப்பாக மாகாண சபைத்தேர்தல் தொடர்பில் எமது நிலைப்பாட்டை எடுத்துக்கூறியதுடன் இது குறித்து விரிவாகக் கலந்துரையாடுவதற்கான இணக்கப்பாடும் எட்டப்பட்டது.

கொழும்பு துறைமுகநகர விவகாரம் தொடர்பில் கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது கலந்துரையாடப்படவில்லை. இவ்விடயம் தொடர்பில் தற்போது உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே, நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்பட்டதன் பின்னர், அதனடிப்படையில் முடிவுகளை மேற்கொள்ளலாம் என்ற நிலைப்பாட்டிலேயே நாம் இருக்கின்றோம். கொழும்பு துறைமுகநகர இடம் அரசாங்கத்தின் வசமாக வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும் - என்றார். (அ)

# புதுக்குடியிருப்பு பிரதேச செயலருக்கு எதிராக நேற்று பொதுமகன் முறைப்பாடு

முல்லைத்தீவு, ஏப். 21

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதாக தெரிவித்து வவுனியா மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

விசுவமடு மாணிக்கபுரத்தை சேர்ந்த குமாரவேலு அகிலன் என்ற முன்னாள் கிராம அபிவிருத்தி சங்கத்தலைவரே நேற்று குறித்த முறைப்பாட்டை செய்துள்ளார்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், எமது கிராமத்தின் கிராம அலுவலரை இடமாற்றம் செய்ய முற்பட்டவேளையில் பொது அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து இடமாற்றத்தை மேற்கொள்ள வேண்டாம் என்று பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தோம். இது தொடர்பாக பிரதேச செயலாளருக்கும், அரச அதிபருக்கும் கடிதம் அனுப்பியிருந்தோம்.

அதன் பின்னர் குறித்த பிரதேச செயலாளர் எனக்கு தொலைபேசியிலே அச்சுறுத்தல் விடுத்திருந்தார். என்னை கவனமாக இருக்குமாறும், "வந்தான் வரத்தான்" என்று தெரிவித்தார். கிராம அபிவிருத்திச் சங்கத்தில் தலைவராக இருக்க முடியாது என்றும் சமூக சேவைகளில் ஈடுபடவேண்டாம் என்றும் அவர் தெரிவித்தார். தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக அரசியலில் ஈடுபட்டால் இந்த அரசாங்கம் "என்ன செய்யும் என்று தெரியும்தானே" என்று மிரட்டினார்.

எனவே எனது தனிமனித சுதந்திரத்தில் தலையிட்டமையாலும், கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் பதவியில் இருந்து நீக்கி, அச்சுறுத்திய மைக்காகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாட்டை செய்துள்ளேன். அவர் என்னோடு உரையாடிய விடயங்கள் தொடர்பான குரல்பதிவுகள் அனைத்தையும் நான் ஆதாரமாக வைத்துள்ளேன் - என்றார். (அ)

# ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புள்ள உளவுத்துறை அதிகாரியின் தகவல்கள் மறைக்கப்பட்டமை ஏன்?

## சபையில் எதிர்க்கட்சி கேள்வி

கொழும்பு, ஏப். 21

ஈஸ்டர் தாக்குதல்களுடன் தொடர்புடைய உளவுத்துறை அதிகாரி ஒருவரை ஷானி அபேசேகர கைது செய்து விசாரித்திருந்தபோதும் அவை தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் ஏன் சேர்க்கப்படவில்லை என எதிர்க்கட்சி கேள்வியெழுப்பியுள்ளது.

உளவுத்துறை அதிகாரி மற்றும் ஈஸ்டர் தாக்குதல் நடத்தியவர்களுக்கு இடையிலான தொடர்புகளை ஐ.பி முகவரி மூலம் குற்றப்புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர கண்டு பிடித்தார் என ஹரின் பெர்னாண்டோ சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை உரையாற்றிய அவர், உளவுத்துறை அதிகாரி கைது செய்யப்பட்டு சி.ஐ.டி.யால் விசாரிக்கப்பட இருந்த நேரத்தில் அந்த அதிகாரியை அவர்களின் காவலுக்கு மாற்றுமாறு இராணுவ புலனாய்வுப் பிரிவு உத்தரவிட்டதாக கூறினார்.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு நடத்திய விசாரணையில் இந்த தகவல்கள் வெளியிடப்பட்டபோதும் அவை ஆணைக்குழுவின் அறிக்கையில் இணைக்கப்படவில்லை என ஹரின் பெர்னாண்டோ சுட்டிக்காட்டினார்.

மேலும் குறித்த தாக்குதலுடன் தொடர்பான விசாரணையில் ஈடுபட்ட சி.ஐ.டி. அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டனர் என்றும், அதே நேரத்தில் அபேசேகரவும் இடமாற்றம் செய்யப்பட்டு பின்னர் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் நவம்பர் மாதம் கைது செய்யப்பட்டார் என்றும் அவர் தெரிவித்தார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக உரையாற்



றும்போது பாராளுமன்றில் கடும் வாய்த்தர்க்கம் இடம்பெற்றதுடன் இதன்போது ஹரின் பெர்னாண்டோ, பாராளுமன்றையும் பொதுமக்களையும் தவறாக வழிநடத்த முயற்சிப்பதாக அரசாங்க தரப்பு உறுப்பினர்கள் குற்றம் சாட்டினர்.

இருப்பினும், தான் ஆதாரங்களுடனும் பேசுவதாக தெரிவித்த ஹரின் பெர்னாண்டோ, 2019 ஈஸ்டர் தாக்குதல்கள் குறித்த உண்மை விரைவில் மக்களுக்கு தெரியவரும் என குறிப்பிட்டார்.

# கரைச்சியில் வீதி விளக்குகள் பொருத்த உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தடை

## பிரதேச சபையின் தவிசாளர் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஏப். 21

கரைச்சியில் வீதி விளக்குகளை பொருத்துவதற்கு உதவி உள்ளூராட்சி ஆணையாளர் தடை விதித்துள்ளார் என கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கரைச்சி பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டு பாதீட்டின் சுமார் 8 மில்லியன் ரூபா 21 வட்டாரங்களுக்கு மின்குமிழ் பொருத்துத்துவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதி குறித்த தேவையை நிறைவு செய்வதற்காக வங்கிக் கணக்கில் இடப்பட்டிருந்தது. இந்த நிதியை விடுவித்து 21 வட்டாரங்களி லும் தலா 45 வீதி விளக்குகளை பொருத்துவதற்கு 2020 ஆம் ஆண்டு பாதீடு அங்கீகாரத்தை வழங்கியிருந்தது.

இந்த வேலைத்திட்டத்தை நிறைவேற்ற உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிரபாகரன் தடை விதித்துள்ளார். ஆளுநருக்கு முகவரியிட்டு சபையினால் அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பத்தை அனுமதி மறுத்து திருப்பி அனுப்பி இருப்பது மோசமான நடவடிக்கை. சபையினால் நிறைவேற்றப்பட்ட பாதீட்டு செயற்றிட்டங்களை தனது சுய விருப்பின் அடிப்படையில் தடுத்திருப்பது உள்ளூராட்சி சபைகளின் சுயாதீனத்திற்கும் மக்கள் ஆணைக்கும் எதிரானது - என்றுள்ளது.

# துறைமுக நகர் சட்டமூலம் குறித்து உயர்நீதிமன்றே இனி தீர்மானிக்கும்

## இராஜாங்க அமைச்சர் சுசில் சுட்டிக்காட்டு

கொழும்பு,ஏப்.21

பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றவேண்டுமா? அல்லது சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றவேண்டுமா? என்பதை உயர்நீதிமன்றமே தீர்மானிக்கும். நீதிமன்றத்தின் தீர்மானத்தை பொறுப்புடன் செயல்படுத்துவோம் என தொலைநோக்கு கல்வி இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டுமாயின் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்க வேண்டும். கொழும்பு துறைமுக நகரத்தை விஷேட பொருளாதார வலயமாக உருவாக்க வேண்டுமாயின் புதிய திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். முதலீட்டாளர்களின் நலன் கருதி பொருளாதார ஆணைக்குழு உருவாக்கும் சட்டமூலம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

பொருளாதார ஆணைக்குழு தொடர்பில் புதிய சட்டங்கள் இயற்றுவது இது முதல் தடவையல்ல. 1980 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கொழும்பு பொருளாதார வலயமும் இவ்வாறான பின்னணியை அடிப்படையாகக் கொண்டு காணப்பட்டது. கொழும்பு பொருளாதார சட் டத்துக்குள் ஏனைய மாகாணங்களில் பொருளாதார வலயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதனால், எவ்வித பிரச்னைகளும் இதுவரையில் தோற்றம் பெறவில்லை.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக் குழுவை ஸ்தாபிப்பதற்கான நீதியமைச்சின் சட்டம்மூலம் சபை முதல்வரால் கடந்த 8 ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. சர்வதேச வர்த்தகம், கப்பற் தொழில், முகாமைத்துவ தொழிற்பாடுகள், கரை கடந்த வங்கித் தொழில், நிதிசார் சேவைகள் தகவல் தொழில்நுட்பம், வியாபார வழிமுறைகள், வெளிநாட்டவர்களைப் பணிக்கு அமர்த்தல், கூட்டிணைக்கப்பட்ட தலைமையங்களின் தொழிற்பாடு, பிராந்திய விநியோக தொழிற்பாடுகள், சுற்றுலாப் பயணத் துறை மற்றும் வேறு துறை சேவைகளை மேம்படுத்துவது இந்த ஆணைக்குழுவின் நோக்கமாகும்.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் தற்போது அரசியல் நோக்கங்களுக்காக விமர்சனத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளன. துறைமுக நகர நிலப்பரப்பு சீனாவுக்கு வழங்கப்படுவதாக போலியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அரசமைப்பின் 3ஆம் அத்தியாயத்தின் நிர்வாக மாவட்ட சட்டத்திற்கமைய கொழும்பு துறைமுக நகரம் கொழும்பு மாவட்டத்துக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது. அத்துடன் மொத்த நிலப்பரப்பும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்துடையாக்கப்பட்டுள்ளது. இதற்கான மூல ஆவணங்களில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கைச்சாத்திட்டுள்ளதுடன், இவ்விடயம் தொடர்பிலான விஷேட வர்த்தமானி 2019 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

நாட்டின் பொதுச்சட்டத்துக்கு அமையவே கொழும்பு துறைமுக நகர பொருளாதார வலய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். அரசமைப்புக்கு முரணான எவ்வித ஏற்பாடுகளும் நகர சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலத்தில் உள்வாங்கப்படவில்லை. வரிச் சட்டங்களில் மாத்திரம் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. கொழும்பு துறைமுக நகரம் சீனாவின் பிராந்தியம் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற வேண்டுமா? அல்லது சாதாரண பெரும் பான்மையுடன் நிறைவேற்ற வேண்டுமா? என்பதை உயர் நீதிமன்றமே தீர்மானிக்க வேண்டும். இச்சட்ட மூலம் தொடர்பில் உயர் நீதிமன்றம் எடுக்கும் தீர்மானத்தை அரசாங்கம் பொறுப்புடன் செயல்படுத்தும் - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஜயதாஸவின் மகன் கைது

கொழும்பு, ஏப். 21
பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷவின் மகன் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து ஒன்றை ஏற்படுத்தி நால்வரை காயங்களுக்கு உள்ளாக்கிய சம்பவம் தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு ராஜகிரிய பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## அரச வங்கியில் பணிபுரியும் 53 ஊழியர்களுக்கு தொற்று

கொழும்பு, ஏப். 21
கொழும்பு- புறக்கோட்டையிலுள்ள அரச வங்கியொன்றில் பணிபுரியும் 53 ஊழியர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று, நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த வங்கி மூடப்பட்டு, கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களை சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் குறித்த வங்கிக்கு வருகை தந்தவர்கள் தொடர்பில் தகவல்கள் சேகரிக்க ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

## டிக்கோயாவை சேர்ந்தவர் முல்லைத்தீவில் மரணம்!

முல்லைத்தீவு, ஏப். 21
முல்லைத்தீவு முள்ளியவளை தண்ணீரூற்றுப் பகுதியில் நேற்றுமுன் தினம் இரவு வீதியில் படுகாயமடைந்த நிலையில் இருந்த நபர் ஒருவர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

ஹற்றன், டிக்கோயா பகுதியை சேர்ந்த நல்லு சிவராசா (வயது-36) என்பவர் முள்ளியவளை தண்ணீரூற்று முல்லைத்தீவு பகுதிகளில் யாகசம் பெற்று வந்துள்ளார்.

இவர் பல தடவைகள் மது அருந்திய நிலையில் வீதிகளில் விழுந்து காணப்பட்டுள்ளார் என மக்கள் தெரிவித்தனர்.

இவர் நேற்றுமுன்தினம் தண்ணீரூற்றுப் பகுதியில் வீதியில் காயமடைந்த நிலையில் விழுந்து கிடந்துள்ளார். இவர் அம்புலன்ஸ் மூலம் முல்லைத்தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்து குறித்து முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் இவரது சடலம் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

# வடக்கு மீனவர்கள் விடயத்தில் பாரபட்சம் காட்டுகின்றது அரசு

## மாகாண கடற்றொழிலாளர் இணையம் குற்றச்சாட்டு

மன்னார், ஏப்.21

**தென்னிலங்கை மீனவர்கள் கைது செய்யப்படுகின்ற நிலையில் அவர்களின் விடுதலைக்கு அரசு துரித முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. ஆனால், வடக்கு மீனவர்கள் இந்திய கடற்படையினரால் கைது செய்யயப்பட்டு தடுத்து வைக்கப்படுகின்ற நிலையில் அவர்களின் விடுதலைக்கு அரசு எவ்வித முயற்சிகளையும் மேற்கொள்வதில்லை என வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் மாவட்ட இணைப்பாளர் என்.எம்.ஆலாம் தெரிவித்தார்.**

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மன்னார் மாவட்ட அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வட மாகாண மீனவர்கள் தொடர்ந்தும் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். அவர்களின் பிரச்னைகளை நாங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தியும் உள்ளோம். அண்மையில் ஏற்பட்ட புயல் காரணமாக பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இன்று வரை எவ்வித இழப்பீடுகளும் வழங்கப்படவில்லை.

வழங்கப்படும் என உத்தரவாதம் வழங்கப்பட்டதே தவிர எவ்வித உதவிகளும் இது வரை பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வழங்கப்படவில்லை.

மேலும், இந்தியா மற்றும் வெளிநாடுகளில் கைது செய்யப்படும் எமது வடக்கு மீனவர்களில் விடுதலை தாமதிக்கப்படுகின்றது.

ஆனால், தென்னிலங்கை மீனவர்கள் கைது செய்யப்படுகின்ற நிலையில் அவர்களின் விடுதலைக்கு அரசு துரித முயற்சிகளை மேற்கொண்டு அவர்களின் விடுதலைக்கு அக்கறை காட்டியுள்ளனர்.

குறிப்பாக மியன்மாரில் கைது செய்யப்பட்ட தென்னிலங்கை மீனவர்கள் அரசு மட்டத்தில் பேசப்பட்டு தற்போது விடுதலை செய்யப்பட்டு தற்போது நாட்டுக்கு அழைத்து வரப்படும் சூழ்நிலை காணப்படுகின்றது.

ஆனால், வட பகுதியில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் தமிழக சிறைகளில் வாடுகின்றனர்.

குறிப்பாக தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த கைது செய்யப்பட்ட மீனவர்கள் தமிழக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களின் வழக்கு விசாரணைகள் முடிவடைந்துள்ளதாக தெரிய வருகின்றது.

ஆனால், அவர்களை நாட்டுக்கு அழைத்து வர இலங்கை அரசு இது வரை கூடிய கவனம் செலுத்தவில்லை. அவர்கள் மீண்டும் நாட்டிற்கு வருவதாக இருந்தால் அந்த நாட்டு சட்டத்திற்கு அமைவாக உரிய முறையில் உரிய ஆவணங்களுடன் அவர்கள் இலங்கைக்கு வருகை தர முடியும்.

ஆனால், இலங்கையில் கைது செய்யப்படுகின்ற இந்திய மீனவர்களை கடல் மார்க்கமாக இந்திய தூதுவர் ஊடாக பாரப்படுத்தப்பட்டு, அவர்கள் ஊடாக நாட்டுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

இலங்கை தமிழ் மீனவர்களை ஒரு விதமாகவும் தென்னிலங்கை மீனவர்களை ஒரு விதமாகவும் இலங்கை அரசு பார்க்கின்றது. கடந்த காலங்களில் கடற்றொழில் அமைச்சர் மேற்கொண்ட நடவடிக்கைகளிலும் குறித்த பாரபட்சத்தை பார்க்கின்றோம்.

குறிப்பாக இந்திய மீனவர்களை எமது கடற்பரப்பில் தொழில் செய்ய அனுமதிப்பதற்கான ஆலோசனையை மேற்கொள்ளுவதாக அறிவித்திருந்தார். இதற்கு எதிராக வட பகுதி மீனவர்கள் தமது ஆழ்ந்த எதிர்ப்பை வெளிப்படுத்தி இருந்தனர்.

இந்த நிலையில் குறித்த நடவடிக்கை இன்று கைவிடப்பட்டுள்ளதா?அல்லது சிந்தனை மாற்றப்பட்டுள்ளதா? என்பது தெரியவில்லை. அரச உயர் மட்டம் இவ்விடையம் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதோடு, எம்முடன் கலந்துரையாடி உள்ளனர். குறிப்பாக இந்திய மீனவர்களின் வருகையை அவர்களும் விரும்பவில்லை என தெரிவித்துள்ளனர்.

எனவே, எதிர் காலத்தில் இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் தொழில் செய்வதை முற்று முழுதாக எந்த மீனவர்களும் அனுமதிக்கமாட்டார்கள் என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

புயல் மற்றும் கொரோனா தொற்று காரணமாக பாதிக்கப்பட்ட வட பகுதி மீனவர்கள் தொடர்ந்தும் இவ்வாறான சூழ்நிலையில் அரசு இந்த மீனவர்களுக்கு என்ன உதவி செய்யப் போகின்றது.

இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகளினால் எமது மீனவர்களின் வலைகளுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு என்ன இழப்பீடுகளை வழங்க போகின்றார்கள். இவ்வாறான பல்வேறு பிரச்னைகள் இருந்தும் இந்த அரசு வட பகுதி மீனவர்கள் மீது அக்கரை கொள்ள வில்லை - என்றார்.

## போர்ட் சிட்டியில் முதலீடு செய்வதற்காக இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு அழைப்பு

கொழும்பு, ஏப். 21
போர்ட் சிட்டியில் முதலீடு செய்ய இந்தியா உள்ளிட்ட வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு இலங்கை அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

கட்டார் மற்றும் ஓமானில் இருந்து கொழும்பு துறைமுக நகர பொருளாதார மண்டலத்துக்கு முதலீடுகளை ஈர்ப்பதற்கு முன்னெடுக்கவேண்டிய நடவடிக்கை குறித்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகவும் எதிர்காலத்தில் இந்தியாவுடன் இணைந்து அதனை முன்னெடுக்குமெனவும் நிதி மற்றும் மூலதனச்சந்தை, அரச தொழில் முயற்சி சீர்திருத்தம் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

மேலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் சிறப்பு தூதுவராக ஓமான் மற்றும் கட்டார் ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டபோது அந் நாட்டு அதிகாரிகளுடன் இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடியதாகவும் அவர் இலங்கையிலுள்ள ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

அத்துடன், முதலீடுகளின் சாத்தியமான பகுதிகளை அடையாளம் காண்பதற்காக இரு நாட்டு பிரதிநிதிகளும் இலங்கைக்கு வருகை தருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் துறைமுக நகரம் தொடர்பான தற்போதைய சட்டமூலம் பாராளுமன்றத்தில் சட்டமாக நிறைவேற்றப்பட்ட பின்னர் இது நடக்குமென அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## அனைத்துச் செயல்பாடுகளிலும் அரசுக்கு முழுமையான தோல்வி

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 21
அரசாங்கம் அனைத்துச் செயல்பாடுகளிலும் முழுமையாக தோல்வியடைந்துள்ளது . தற்போது விற்பதற்கு எதுவும் இல்லை என்பதால் துறைமுக நகரை விற்க அரசாங்கம் முயற்சிக்கிறது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

துறைமுக நகர ஆணைக்குழு தொடர்பான சட்ட மூலம் அவசரமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. கடந்த வாரம் நடைபெற்ற கட்சி தலைவர் கூட்டத்தில் கூட இது தொடர்பில் அவதானம் செலுத்தப்படவில்லை. இவ்வாறான சட்ட மூலம் சமர்ப்பிக்கப்படும் போது நீதிமன்றத்திற்கு செல்வதற்கு ஒரு வார காலம் காணப்படும்.

எனினும் இந்த சட்ட மூலம் விடுமுறை ஆரம்பமாகும் காலத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த சட்ட மூலத்தில் காணப்படும் பாரதூரமான விடயங்கள் நாட்டுக்கு வெளிப்படுவதை தடுப்பதற்காக சூட்சுமமாக அரசாங்கம் செயல்பட்டுள்ளமை இதன் மூலம் தெளிவாகிறது.

இந்த சட்ட மூலத்தில் நிதிச் சலவை சட்ட உறுப்புரையை உள்ளடக்க வேண்டும். அத்தோடு இது தொடர்பில் பரந்தளவிலான பேச்சுவார்த்தைகளும் முன்னெடுக்கப்படவேண்டும். இந்த துறையுடன் தொடர்புடையவர்களின் ஆலோசனை இன்றி வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டால் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாது.

தற்போது அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டங்களுக்கு அமைய எதிர்வரும் 25 ஆண்டுகளுக்கு எமக்கு எவ்வித பயனும் கிடைக்கப் போவதில்லை. நல்லாட்சி அரசாங்கத்தில் இதன் ஒரு சிறு பகுதி கூட விற்கப்படவில்லை.

எனவே துறைமுக நகரத்தை பாராளுமன்ற நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதோடு , கோப் மற்றும் கோபா குழுக்களுக்கு இதன் செயல்பாடுகள் தொடர்பில் ஆண்டுதோறும் அறிக்கை தயாரிப்பதற்கும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும். அத்தோடு நிதி சலவை சட்ட உறுப்புரையையும் இந்த சட்ட மூலத்தில் உள்ளடக்க வேண்டும்- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிநாட்டை உருவாக்குவதற்கு பணம் கொடுத்தார் பிரேமதாஸ

## பிரசன்ன ரணதுங்க குற்றச்சாட்டு



கொழும்பு,ஏப்.21

**பிரேமதாச அரசாங்கம்தான் ஒரு தனி மாகாணத்தை உருவாக்க தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பணம் மற்றும் ஆயுதங்களை வழங்கியது என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குற்றம் சாட்டினார்.**

30 ஆண்டுகால யுத்தத்தின் பின்னர் பிரிவினைவாதத்தை தோற்கடித்த தலைவர்கள் ஆட்சியில் இருக்கும்போது நாட்டைக் காட்டிக் கொடுக்கும் எந்தவொரு முடிவிற்கும் இடமில்லை என்றும் ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஆட்சிக்கு வரும் ஒரு அரசாங்கம் நாட்டை பொருளாதார ரீதியாக பலப்படுத்தும் முடிவுகளை எடுக்கும்போது, சக்திவாய்ந்த நாடுகள் தலைவர்களை மாற்றவும் ஆட்சியை மாற்றவும் நடவடிக்கை எடுக்கின்றன என்றும் குற்றம் சாட்டினார்.

இலங்கை போன்ற நாடுகள் வளர்ச்சியடைவதை சக்திவாய்ந்த நாடுகள் விரும்பவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் விஜயம்

மட்டக்களப்பு, ஏப். 21

இலங்கையை உலுக்கிய ஈஸ்டர் தாக்குதல் நடைபெற்று இன்றுடன் இரண்டு ஆண்டுகள் பூர்த்தியடைகின்றன. இதனை முன்னிட்டு இன்று பல்வேறு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

ஈஸ்டர் தாக்குதலுக்குள்ளான மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்களான டாக்டர் காவிந்த ஜயவர்த்தன,ஹெட்டர் அப்புகாமி ஆகியோர் விஜயம் செய்தனர்.

இதன்போது மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதில் கொல்லப்பட்ட 31பேருக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது. மெழுகுதிரியேற்றப்பட்டு பிரார்த்தனையும் நடத்தப்பட்டது.

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தின் பிரதம போதகர் ரொசான் மகேசன் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த அஞ்சலி நிகழ்வை மேற்கொண்டனர்.

தாக்குதல் சம்பவம் நடைபெற்று இரண்டு ஆண்டுகள் கடந்தபோதிலும் முதல் தடவையாக தாக்குதல் நடந்த ஆலயத்தில் இந்த ஆண்டுதான் ஆராதனை நடத்தவுள்ளதாக சீயோன் தேவாலயத்தின் பிரதம போதகர் ரொசான் மகேசன் தெரிவித்தார். இந்த தாக்குதலுடன் தொடர்புபட்டவர்களை நீதியின் முன்பாக நிறுத்துவது அரசாங்கத்தின்பொறுப்பு அதனை அவர்கள் செய்வார்கள் என நினைக்கின்றேன் எனவும் போதகர் இதன்போது தெரிவித்தார்.

# யாழ்.மக்கள் விழிப்புணர்வுடன் செயல்படவேண்டியது அவசியம்

## வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப். 21

கொரோனா தொடர்பாக யாழ்ப்பாணம் மக்கள் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டியது அவசியம் என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் ஸ்ரீ பவானந்த ராஜா தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட கொரோனா நிலைமைகள் தொடர்பில் நடத்திய ஊடக சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வட மாகாணத்தைப் பொறுத்தவரை கொரோனா அதிகரித்து வருகின்றது. அதேபோல யாழ்.போதனா வைத்தியசாலையில் ஞாயிறும் திங்களும் இரண்டு மரணங்கள் கொரோனா தொற்று காரணமாக ஏற்பட்டிருக்கின்றன.

எனவே, இது தொடர்பில் மக்களின் விழிப்புணர்வு மிக அத்தியாவசியமாக காணப்படுகின்றது. அந்த வகையில் நமது வைத்தியசாலையில் பல முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை செய்திருக்கின்றோம். உதாரணமாக இப்பொழுது எமது வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை பெறுபவர்களுக்கும் சத்திரசிகிச்சை கூடத்திற்கு செல்வோர் அனைவருக்கும் பி.சி.ஆர் பரிசோதனை செய்த பின்புதான் அவர்களை சத்திர சிகிச்சைக்காக அனுமதிக்கின்றோம்.

அதேபோல விபத்து பிரிவில் வருபவர்கள் உடனடியாக சத்திரசிகிச்சை செய்ய வேண்டி இருப்பின் அவர்களுக்கு பி.சி. ஆர். பரிசோதனை மேற்கொண்ட பின்னரே சிகிச்சைக்காக அனுமதிக்கின்றோம்-என்றார்.

# மே தின பேரணிகளை தவிர்ப்பதற்கு முடிவு!

கொழும்பு, ஏப். 21

கொரோனா தொற்று காரணமாக மே தின ஊர்வலங்களைத் தவிர்ப்பதற்கும் சுகாதார நடைமுறைகளுடன் பேரணிகளை நடத்தவும் பொதுஜன பெரமுன கூட்டணியின் பங்காளி கட்சி தலைவர்கள் கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

இதன்போது தொழிலாளர் தினத்தை குறிக்கும் வகையில் மே தின கொண்டாட்டங்கள் குறித்து இந்த சந்திப்பில் விவாதிக்கப்பட்டதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த கலந்துரையாடலில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்கள் ஜி.எல். பீரிஸ், தினேஷ் குணவர்தன உள்ளிட்ட பல கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

# புத்தர் சிலை உடைப்பு: குற்றப்பத்திரிகை தாக்கல்

கொழும்பு, ஏப். 21

2018 ஆம் ஆண்டில் மாவனெல்ல புத்தர் சிலை உடைப்பு சம்பவத்துடன் தொடர்புடைய 17 பேர் தொடர்பான விசாரணைக்காக நீதிமன்ற அமர்வை நியமிக்குமாறு சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா பிரதம நீதியரசரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் விதிகளின் கீழ் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக கேகாலை மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும் சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பாளரும், சட்டத்தரணியுமான நிஷாரா ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக முக்கிய குற்றவாளிகளாக நௌபர் மௌலவி, இப்ராஹிம் மௌலவி, மொஹமட் சாஹித், மொஹமட் சாஹித், சாதிக் அப்துல்லா, சைனுல் அப்தீன், மொஹமட் மில்ஹான் மற்றும் 9 பேர் பெயரிடப்பட்டுள்ளனர்.

வன்முறையை ஏற்படுத்த சதித்திட்டம் தீட்டியமை மாவனெல்ல பகுதியில் புத்தர் சிலைகளை உடைப்பதன் மூலம் சமூகங்களிடையே ஒற்றுமையை சீர்குலைப்பதற்கு முயற்சித்ததாக அவர்கள் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

# எதிர்காலத்தில் சீன தடுப்பூசி செலுத்தப்படுமா? தனக்கு தெரியாதென்கிறார் சுகாதார அமைச்சர்!

கொழும்பு, ஏப். 21

எதிர்வரும் காலத்தில் இலங்கையர்களுக்கு சீனாவின் தடுப்பூசி செலுத்தப்படுமா என்பது தனக்கு தெரியாதென இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ள தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போது இதனை தெரிவித்தார்.

அத்துடன், ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராசெனேகாவின் முதல் தடுப்பூசி செலுத்தியவர்களுக்கு இரண்டாவது தடுப்பூசியாக சீனாவின் தடுப்பூசி செலுத்தப்படாது, உலக சுகாதார அமைப்பின் தற்போதுள்ள வழிகாட்டுதல்களின்படி தடுப்பூசி வகைகளை கலக்க முடியாது என்று அமைச்சர் கூறினார்.

தற்போது அஸ்ட்ராசெனேகா தடுப்பூசி கையிருப்பு இல்லாததால், சீன தயாரித்த சினோபார்ம் தடுப்பூசி இரண்டாவது டோஸாக வழங்கப்படுமா என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது இராஜாங்க அமைச்சர் இதனை தெரிவித்தார்.



அத்துடன், முதல் டோஸ் செலுத்தப்பட்டதிலிருந்து 12 வாரங்களில் இரண்டாவது டோஸ் வழங்க உலக சுகாதார நிறுவனம் அறிவுறுத்தியது. எனினும், முதல் தடுப்பூசி செலுத்தப்பட்ட 14-16 வாரங்களுக்கு பின்னரே, இரண்டாவது தடுப்பூசி வழங்க அரசாங்கம் இப்போது நடவடிக்கையெடுத்துள்ளது என சஜித் குறிப்பிட்டார்.

அவரது கேள்விகளுக்கு பதிலளித்த அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, 2021 ஜனவரி 29 ஆம் திகதி தடுப்பூசி திட்டம் தொடங்கப்பட்டது. முதல் டோஸை வழங்கியதில் இருந்து 4 வாரங்களில் இரண்டாவது டோஸை வழங்குமாறு உலக சுகாதார நிறுவனம் ஆரம்பத்தில் அறிவுறுத்தியது.

இருப்பினும், மேலும் ஆராய்ச்சிகளில் 12 வாரங்களுக்குப் பிறகு இரண்டாவது டோஸை செலுத்தினால், நோய் எதிர்ப்பு சக்தியை 95 வீதம் அதிகரிக்க உதவும் என்பது தெரிய வந்தது.

முதல் டோஸ் வழங்கப்பட்ட பின்னர்14- 16 வாரங்களுக்குப் பிறகு இரண்டாவது டோஸ் வழங்கப்படுவது சிறந்த பலனை தருவது தெரிய வந்துள்ளது என அமைச்சர் விளக்கினார்.

எனினும், எதிர்காலத்தில் சீனாவின் தடுப்பூசி வழங்கப்படுமா என்பது தனக்கு இப்போது தெரியாதென கூறினார்.

# பாடசாலை விடுமுறை ஒரு வாரமாக குறைப்பு!

கொழும்பு, ஏப். 21

இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் இரண்டாம் தவணை பாடசாலை விடுமுறை நாள்கள் ஒரு வாரமாக குறைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பாடங்களை பூரணப்படுத்துவதற்கான தேவையை கருத்திற்கொண்டே இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இம்முறை கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை, ஒக்டோபர் மாதம் 4ஆம் திகதியிலிருந்து 30 ஆம் திகதி வரையும் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை ஒக்ரோபர் 3ஆம் திகதியும் நடைபெறவுள்ளது. இதனால், மாணவர்களுக்கு நீண்ட விடுமுறை வழங்க முடியாதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**44 வயதாகும் அலெக்ஸே நவால்னிக்கு, 'நோவிசோக்' என்கிற நரம்பு மண்டலத்தை பாதிக்கும் இரசாயனம் செலுத்தப்பட்டது. அதனால் கடந்த ஓகஸ்ட் 2020இல் கிட்டத்தட்ட இறந்தேவிட்டார் எனலாம். அப்போது அலெக்ஸே நவால்னி ஜேர்மனிக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டது நினைவுகூரத்தக்கது. இப்போது சிறைச்சாலைக்குள் அவர் மரணத்துடன் போராடும் நிலையில், ரஷ்யாவில் பதற்ற நிலை அதிகரித்து வருகின்றது.**



# சிறையில் மரணத்துடன் போராடும் ரஷ்யாவின் எதிர்க்கட்சித் தலைவர்

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதடினை கடுமையாக விமர்சிக்கும், ரஷ்ய எதிர்கட்சித் தலைவர் அலெக்ஸே நவால்னிக்கு மருத்துவ சிகிச்சை வழங்கவில்லை எனில், அவர் ஓரிரு நாளில் இறக்கக் கூடும் என, அவரது மருத்துவக் குழுவினர் எச்சரித்துள்ளனர்.

எப்போது வேண்டுமானாலும் அலெக்ஸே நவால்னிக்கு இருதய செயலிழப்பு அல்லது சிறுநீரக செயலிழப்பு ஏற்படலாம் என அவரது சமீபத்திய ரத்த பரிசோதனை முடிவுகள் குறிப்பிடுவதாகக் கூறுகிறார்கள் மருத்துவர்கள்.

சிறையில் இருக்கும் தனக்கு, கடுமையான முதுகு வலி மற்றும் காலில் உணர்வின்மை போன்ற பிரச்னைகளுக்கு, தனக்கு முறையான மருத்துவ சிகிச்சை வழங்கப்பட வேண்டும் என கடந்த 20நாட்களாக உண்ணாவிரதத்தில் இருக்கிறார் அலெக்ஸே நவால்னி.

ரஷ்ய அதிபர் புதினை கடுமையாக விமர்சிக்கும் இவர், ஒரு பழைய கையாடல் வழக்கின் கீழ் கடந்த பிப்ரவரி மாதம் சிறையில் அடைக்கப்பட்டார்.

அலெக்ஸே நவால்னியின் மருத்துவரான அனஸ்டாசியா வசில்யெவா உட்பட நான்கு மருத்துவர்கள், அலெக்ஸே நவால்னியை உடனடியாகக் காண சிறை அதிகாரிகளிடம் அனுமதி கேட்டு கடிதம் எழுதி இருக்கிறார்கள்.

அக்கடிதத்தை, மருத்துவர் அனஸ்டாசியா வசில்யெவா தன் டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்திருக் கிறார். அக்கடிதத்தில் அலெக்ஸே நவால்னியின் ரத்தத்தில் இருக்கும் பொட்டாசியம் அளவு மிகவும் மோசமான நிலையை அடைந்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அதாவது அவரது சிறுநீரகமும், இதயமும் எப்போது வேண்டுமானாலும் பாதிக்கப்படலாம் என அதில் விளக்கப்பட்டுள்ளது.

ஒரு லீற்றர் ரத்தத்தில் 6.0 மில்லி மோல்ஸ்களுக்கு மேல் பொட்டாசியம் இருந்தால் அவர்களுக்கு உடனடியாக சிகிச்சை வழங்கப்பட வேண்டும். அலெக்ஸே நவால்னியின் ஒரு லீற்றர் இரத்தத்தில் 7.1 மில்லிமோல் பொட்டாசியம் இருப்பதாக அவரது ரத்தப் பரிசோதனை முடிவுகளில் குறிப்பிடப்பட்டிருப்பதாக, அக்கடிதத்தில் கூறப்பட்டு இருக்கிறது.

"அலெக்ஸே நவால்னியின் இரத்தப் பரிசோதனை முடிவுகளை கருத்தில் கொண்டும், இதற்கு முன் அவரைக் கொல்ல விஷ ஊசி போடப்பட்டதை கருத்தில் கொண்டும்" அவரை உடனடியாக பரிசோதிக்க அனுமதிக்குமாறு மருத்துவர்கள், சிறை அதிகாரிகளிடம் வலியுறுத்தி இருக்கிறார்கள்.

44 வயதாகும் அலெக்ஸே நவால்னிக்கு, 'நோவிசோக்' என்கிற நரம்பு மண்டலத்தை பாதிக்கும் ரசாயனம் செலுத்தப்பட்டது. அதனால் கடந்த ஆகஸ்ட் 2020-ல் கிட்டத்தட்ட இறந்தேவிட்டார் எனலாம். அப்போது அலெக்ஸே நவால்னி ஜேர்மனிக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டது நினைவுகூரத்தக்கது.

தன்னை இரசாயனம் செலுத்தி கொல்ல முயன்றது புடின்தான் என குற்றம்சாட்டினார் நவால்னி, ஆனால் அதை ரஷ்ய அரசு தொடர்ந்து மறுத்து வருகிறது.

தன் கணவரின் உடல் எடை 76 கிலோவாக இருப்பதாகவும், இது அவர் உண்ணாவிரதம் இருப்பதற்கு முன்பு இருந்த உடல் எடையை விட 9 கிலோ குறைவு எனவும் அலெக்ஸே நவால்னியின் மனைவி யூலியா கூறியதாக ஏ பி செய்தி முகமை குறிப்பிடுகிறது.

நவால்னிக்கு விஷம் கொடுத்த பின் அவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர்களில் ஒருவரான அலெக்ஸாண்டர் பொலுபன், நவால்னியின் இரத்தப் பரிசோதனை முடிவுகளை பதிவிட்டிருக்கிறார். அதோடு, அவருக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சை வழங்கப்பட வேண்டும் என்பதைத் தான் இந்த முடிவுகள் காட்டுகிறது. இல்லையெனில் அடுத்த சில நாட்களில் அவர் இறந்துவிடுவார் என எச்சரித்திருக்கிறார்.

நவால்னிக்கு போதிய மருத்துவ சிகிச்சை வழங்கப்படுவதை ரஷ்ய அதிபர் புடின் உறுதி செய்ய வேண்டுமென, 70-க்கும் மேற்பட்ட கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஒரு கடிதத்தில் கையெழுத்திட்டு புடினுக்கு கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

தி எகனாமிஸ்ட் மற்றும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லெ மாண்டே நாளேடு அக்கடிதத்தைப் பிரசுரித்திருக்கிறது.

அலெக்ஸே நவால்னிக்கு வழங்கப்படும் மருத்துவ சிகிச்சைகள் முற்றிலும் நியாயமற்றவை மற்றும் பொருத்தமற்றவை என நேற்று பத்திரிகையாளர்களிடம் கூறினார் அமெரிக்க அதிபர் ஜோ பைடன். ரஷ்ய அரசாங்கம்தான் நவால்னி மீது விஷத் தாக்குதலை நடத்தியது என கடந்த மார்ச் மாதம் அமெரிக்காவின் புலயான்வுத் துறை ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது.

ஜோ பைடன் அரசு மூத்த ரஷ்ய அதிகாரிகள் மீது தடை விதித்தது. தற்போது ரஷ்யாவும் அதே போல அமெரிக்க அதிகாரிகள் மீது தடை விதித்து பதிலடி கொடுத்துக் கொண்டிருக்கிறது.

தனக்கு கடுமையான முதுகு வலி இருப்பதாகவும், தன் வலது காலில் உணர்வின்மை இருப்பதாகவும் கூறுகிறார் நவால்னி. இந்த மாத தொடக்கத்தில் கூட, தொடர்ந்து இருமல் இருப்பதாகவும், காய்ச்சல் அடிப்பதாகவும் கூறினார் நவால்னி. எனவே, பொக்ரோவ் நகரத்தின் சிறையில் இருக்கும் சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார்.

தன் மருத்துவக் குழுவினரே தனக்கு மருத்துவ சிகிச்சை வழங்க வேண்டுமென உண்ணா விரதத்தில் இறங்கினார் நவால்னி. ரஷ்ய சிறை அதிகாரிகளோ, தங்கள் தரப்பு மருத்துவர் கொடுக்கும் சிகிச்சையைப் பெற நவால்னி மறுத்துவிட்டதாகக் கூறுகிறார்கள்.

நவால்னியை சிறைக்குச் சென்று சந்திக்கும் அவரது வழக்குரைஞரோ, அச்சிறையில் மருத்துவர்களே இல்லை எனவும், அங்கு அவசர சிகிச்சையளிக்கும் ஒரே ஒரு பாராமெடிக் தான் இருக்கிறார் எனவும் கூறுகிறார்.

நவால்னி அடைக்கப்பட்டிருக்கும் சிறை, அதன் மோசமான மற்றும் கடினமான சூழல்களுக்கு பெயர் போனது என்கிறார்கள் மனித உரிமை செயற்பாட்டாளர்கள். நவால்னி அடைக்கப்பட்டிருக்கும் சிறையில் நிலவும் சூழல்கள், அவரை துன்புறுத்தும் விதத்தில் இருக்கும், அது அவரை மெல்ல கொல்லும் விதத்தில் இருக்கலாம் என சர்வதேச மன்னிப்புச் சபை கூறியுள்ளது.

**-பி.பி.சி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கண்காணிப்பு யுகமும் வடக்கு – கிழக்கும்

எழில் ராஜன்

சோஷனா சுபோவ்வினுடைய 'கண்காணிப்பு முதலாளித்துவ யுகம்: புதிய அதிகாரத் தளத்தில் மனித எதிர்காலத்திற்கான போராட்டம்' என்ற நூல் மிக அண்மைக் காலமாக பிரபலம் பெற்ற நூலாக பேசப்படுகின்றது. அதற்கு முன்னர், யாஷா லெவின் சோவியத் யூனியனைச் சேர்ந்த ஒரு புலனாய்வுப் பத்திரிகையாளர், தன்னுடைய நூலில் இணையத்தள அபிவிருத்தியில் இராணுவ செல்வாக்குப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

பனிப்போரின் பின் கணிணி அறிமுகப்படுத்தப்பட்டது என குறிப்பிடும் ஆசிரியர், கணிணி அமெரிக்க ஏகாதிபத்தியத்தை தக்க வைப்பதற்காக உருவாக்கப்பட்டதாக விபரிக்கின்றார். தொடர்ந்து குறிப்பிடுகையில் இணையத்தளம் எப்போதுமே கண்காணிப்பு தொடர்பானது, இது ஒரு இரகசியமான விடயமுமல்ல. இவ்வாறான வலைப்பின்னல் அறிமுகம் கிளர்ச்சியை அடக்குவதற்காக வியட்நாம் போரில் தொடங்கி இன்றுவரைக்கும் பயன்படுத்தப்படுவதான குற்றச்சாட்டு இன்றும் இருந்து வருகின்றது. இதனுடைய அடுத்த நகர்வாகத்தான் இணையத்தளத்தை தனியார் மயப்படுத்துவதை நோக்க வேண்டி இருக்கின்றது.

இத்தளத்திலே தான் googleஇன் எழுச்சியையும், இணையத்தளத்தில் 'தேடும்படலத்தில்' தனியுரிமை மிக்க வல்லரசாக உள்ளது. தற்போது பூடெடைநெ நிகழ்நிலை உலகத்தை தமது மேலாண்மைக்குள் ஐந்து நிறுவனங்கள் கொண்டிருக்கின்றன. அமேசன், அப்பிள், பேஸ்புக், கூகுள், மைக்ரோசொப்ட் Google க்கும் பெண்டகனுக்கும் இடையிலான தொடர்புகள் பற்றியும், அமேசன் தற்போது அபிவிருத்தி செய்து வரும் Cloud Computing க்கும் சி.ஐ.ஏ.க்குமிடையிலான தொடர்புகள் பற்றியுமான தகவல்கள் இரகசியமானது அல்ல. ஒட்டு மொத்தத்தில் Silicon Valley ஐ சூழவுள்ள கணிணி ஏகாதிபத்திய சாம்ராஜ்யத்திற்கும் அமெரிக்க படைத்துறை கட்டுமான உளவுத்துறைக்குமிடையிலான தொடர்புகள் பற்றிய வெளிப்படையான ஆய்வுகள் பொதுவெளியில் நிறையவே உள்ளன.

Shoshona Zuboff குறிப்பிடுகின்ற கண்காணிப்பு முதலாளித்துவம், மனித அனுபவத்தை, இலவசமான மூலப்பொருளாகக் கொண்டு மனித நடத்தையை தீர்மானிக்கின்றது. மனித அனுபவத்தினூடாக கிடைக்கப்பெறும் தகவல்கள், நடத்தை தரவுகளாக மாற்றப்பட்டு, 'இயந்திர அறிவு' பொறிமுறைக்கூடாக எதிர்வு கூறப்படும் முடிவுப் பொருளாக மாற்றப்படுகின்றது. இதன் மூலம் ஒருவர் எதிர்காலத்தில் என்ன செய்யக்கூடும் என்பதைத் தீர்மானித்தலாகும். இவை எதிர்காலத்தில், எதிர்கால நடத்தை சந்தையில் விற்பனைப் பொருளாக்கப்படும். மத்தியில் ஒருங்கிணைக்கப்பட்ட தரவுகள் மனிதர்களின் நடத்தை பற்றிய எதிர்வுகூறலை செய்வதோடல்லாமல், மனிதர்களின் நடத்தையையும் தீர்மானித்து கட்டமைப்பவையாகவும் மாறுகின்றன.

ஆசிரியர் குறிப்பிடுகின்ற, அறிவிலிருந்து அதிகாரத்திற்கான நகர்வு மனிதர்களை தானியங்கு நடத்தைக்கு மாற்றுவதாகும். 'எங்களுக்கான ஏகாதிபத்தியத்தை அல்லது ஆதிக்கத்தை நாங்கள் பணம் கொடுத்து தெரிவு செய்கின்றோம்' (அதே நூல்).

"கண்காணிப்பு முதலாளித்துவம் எங்களைப் பற்றிய ஒவ்வொன்றையும் தெரிந்து கொண்டிருக்கின்றது. ஆனால், அவர்களுடைய செயற்திட்டங்கள் எங்களுக்குத் தெரிவதில்லை. எங்களிலிருந்து புதிய அறிவைப் பெற்றுக் கொள்கின்றனர். ஆனால், எங்களுக்காக அல்ல. எங்களுடைய எதிர்காலத்தை ஏனையவர்களுடைய நலன்களுக்காக எதிர்வு கூறுகின்றனர்.." (அதே நூல்). முதலாளித்துவம் சமூக விழுமியங்களை கட்டவிழ்க்கின்றது, அதே நேரத்தில் தனிமனித சுதந்திரத்தையும் சிக்கலுக்குட்படுத்துகின்றது. அதனூடாக ஜனநாயக அடிப்படை விழுமியங்களை சவாலுக்குட்படுத்துகின்றது. கண்காணிப்பு முதலாளித்துவத்தின் வளர்ச்சி மனித இருப்பை சவாலுக்குட்படுத்துகின்றது.

Suboff, கண்காணிப்பு முதலாளித்துவத்தை மோசமான அல்லது வலிமையான சக்தியாக குறிப்பிடுகின்றார். இது அறிவைக் கொண்டு ஆரம்பிக்கின்றது, அதே நேரத்தில் அந்த அறிவை முற்றுரிமை எடுக்கின்றது: அறிவை, ஆணையுரிமையை, அதிகாரத்தை வரையறுக்கின்றது. அறிவு என்று குறிப்பிடுவது முறைசார் கற்கை மூலம் பெறப்படும் அறிவு அல்ல, மாறாக புதிதாக பெறப்படும் அறிவை, இயந்திரங்கள் தரவுகளை சேகரித்து, ஆராய்வதன் மூலம் பெறப்படும் அறிவை. இவ்வாறான மீதரவுகள் (Bid Data) லாபமீட்டுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. மனித உணர்வு நிலையை கண்காணிப்பதனூடாக அவற்றை மீகை நடத்தையாக மாற்றி அதன் பின்னர் அந்நடத்தையை திரிவுபடுத்திக் கட்டமைத்து, அதையே கட்டுப்படுத்தும் கருவியாக உபயோகித்து, அதிகாரமாக உருமாற்றுகின்றது. 'கூகுள் வரைபடம்' தொழிநுட்பத்தை அவர் 'காலனித்துவம் எனக் குறிப்பிடுகின்றார். ஐரோப்பிய காலனித்துவத்திற்கு நிலபட வரைபு மிக முக்கியமானது. நிலபட வரைபு (Mapping) நிலப்பகுதியை வெற்றி கொள்ளலுக்கு இன்றியமையாததாக காட்டி, வெற்றி கொள்ளலுக்கு கைப்பற்றப்பட்டதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதல் அவசியமானது என்கின்றார் C.H.Gray.

கூகுள் தனிநபரின் 'தேடும் வரலாற்றை' சேகரித்து, தேசிய புலனாய்வுத் துறையுடனும், காவல்துறையுடனும் பகிர்ந்து கொண்டதை ஒப்புக் கொண்டது (S. Suboff 2015). கேம்பிரிஜ் அனாலிடிக்கா (Cambridge Analytica) என்ற வணிக நிறுவனம், வாக்காளர் மீது செல்வாக்குச் செலுத்தும் ஆலோசனைக்குழு, 87 மில்லியன் பேஸ்புக் வாடிக்கையாளர்களது தனிப்பட்ட தரவுகளைப் பயன்படுத்திய வரலாறு நினைவிருக்கும். இவ் வணிக ஆலோசனைக்குழு நடத்திய கணக்கெடுப்பிலிருந்து வாக்காளர்களது நடத்தை எதிர்வு கூறப்பட்டது. ஆனால், அதே வணிக நிறுவனம் Ted Cruz க்கும் டொனால்ட் ட்ரம்பிற்கும் அவர்களுடைய தேர்தல் பிரச்சாரத்தில் உதவியது என குற்றஞ் சாட்டப்பட்டது. இணையத்தளம் என்பது ஒரு கண்காணிப்பு வெளி. இதனுடைய எல்லைகள் தெளிவாக வரையறுக்கப்படாமல் இருக்கும். இந்தக் கண்காணிப்பு வெளி இணையத் தளத்தில் தான் வாழ்க்கை வாழப்பட வேண்டும் என்ற சமூகக் கட்டமைப்பை உருவாக்கி விட்டது. இதனால் தான் பெரும்பாலானோர் இதைத் தவிர்க்க முடியாத நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகின்றனர்.

அதனால் ஈடுபட வேண்டிய தேவைக்குள் உள்வாங்கப்படுகின்றனர். இதை 'சமூக கண்காணிப்பு என்பர். இந்தக் கண்காணிப்பு வெளி வணிக ஈடுபாட்டுடன் மட்டும் வரையறுத்துக் கொள்ளப்படவில்லை. அரசுப் புலனாய்வுத்துறையும், காவல்துறையும் இதைப் பயன்படுத்து கின்றது.

சமூக வலைத்தளங்களில் நேரம் எவ்வளவிற்கு செலவிடப்படுகின்றதோ அவ்வளவிற்கு தரவுகள் சேகரிக்கப்படுகின்றது. அத்துடன், கண்காணிப்பும் நடைபெறுகின்றது. இணையத்தள கண்காணிப்பு, கண்காணிப்பு பண்பாட்டை உருவாக்கியது. கண்காணிப்பு கமராக்களின் அறிமுகம் கண்காணிப்பை இன்னும் தீவிரமாக்கியது. குறிப்பாக மக்களுடைய தனிநபருடைய வினைத்திறன் மிக்க வெளியை இந்த கமராக்கள் ஆக்கிரமித்தன. இக் கண்காணிப்பு தனிநபர்களுடைய வாழ்க்கையையும், நாளாந்த வாழ்க்கையையும் ஆக்கிரமித்துக் கொண்டது. இப்பண்பாடு எவ்வாறு நாங்கள் இருக்க வேண்டும் என்பதையும், எவ்வாறு இருக்கக்கூடாது என்பதையும் தீர்மானித்துக் கொண்டது. உதாரணம் அலுவலக வாயில் திறக்கப்படமாட்டாது, என்னுடைய நுழைவு அட்டை புதுப்பிக்கப்படாவிட்டால், அதேபோல் என்னுடைய கார் வேலை செய்யாது, என்னுடைய குருதியில் அதிகமாக மதுபானம் கலந்திருந்தால், இதுவே சமூக வலைத்தளங்களில் நாங்கள் நினைத்த நபர்களை பின்தொடர்வதிலிருந்து கண்காணிப்பது வரை நீண்டிருக்கும்.

Suboff ஹாவார்ட் கசட் நேர்காணலில் கண்காணிப்பு முதலாளித்துவத்தினால் ஏற்படப் போகும் ஜனநாயகத்தின் மாற்றம் அல்லது அழிவு பற்றிக் குறிப்பிடும் போது குறிப்பாக, கண்காணிப்பு முதலாளித்துவம் ஏற்படுத்தும் 'நடத்தை மாற்றத்தால் தனிமனித சுதந்திர இழப்பும், தனிமனித செயலாண்மைத்தன்மை இழப்பும், ஜனநாயகத்தை உள்ளிருந்து பாதிக்கின்றது எனக் குறிப்பிடுகின்றார்.

இலங்கை அரசு கண்காணிப்பு முதலாளித்துவத்தை இலங்கையில் 'மற்றமைகளுக்கெதிராக' கட்டமைக்கின்றது. அரசிற்கும் தொழிநுட்ப சாம்ராஜ்யத்தை தக்க வைத்துக் கொள்ளும் நிறுவனங்களுக்கிடையேயும் உள்ள தொடர்பு பற்றி ஒரு சில உதாரணங்களுக்கூடாக பார்க்கின்ற போது, அரசு எவ்வாறு 'மற்றமைகளுக்கெதிரான' அடக்குமுறையை இந்நிறுவனங்களைப் பயன்படுத்தி, ஏனைய நாடுகளைப் போல, கட்டவிழ்த்துள்ளது என்பதை உற்று நோக்கலாம். இறுதிப் போர் என்று அரசு குறிப்பிடும் போர்க்காலப்பகுதியில் கூகுள் செய்மதிப் படங்கள் இல்லாமற் செய்யப்பட்டன. இறுதிப் போர் நடந்தன எனக் குறிப்பிடப்படும் இடங்களில் போர் தொடர்பான ஆவணங்கள், நிலத்தோற்றங்கள், மனிதப் புதைகுழிகள் இன்னும் பிற கூகுள் கொள்ளடக்கத்தில் சாதாரண பாவனையாளர்களின் பார்வைக்கு இல்லாமலே போய்விட்டது. இதைக்கொண்டு ஏனைய அனுமானங்களை ஊகிக்க முடியும்.

அதேபோல ஏனைய சமூக வலைத்தளங்களில் ஈழத்தமிழர் சார்பான, தமிழின போராட்டம் தொடர்பான பதிவுகள் எல்லாமே கண்காணிக்கப்படுவதோடு தணிக்கைக்குட்படுத்தப்படுகின்றன. இதற்கான மிகச் சிறந்த உதாரணங்களாக போன வருடம் மாவீரர் வாரத்தில் அது தொடர்பான பதிவேற்றம் செய்தவர்கள் பலர் கைதுசெய்யப்பட்டனர். மிக அண்மையில் கூட Instagram, ஈழத்தமிழர் தொடர்பான சொற்களின் பாவனையை தனது வலைத்தளத்தில் தடை செய்திருந்தது. அது தவிர Amazon வணிக வலைத்தளத்தில் இலங்கை கொடியுடனான கால் துடைப்பம், உள்ளாடைகள் என்பன தடைசெய்யப்பட்டன.

வடக்கு - கிழக்கில் எழும் போராட்டங்களை மையப்படுத்தி கூட்டான அடக்குமுறைக்கெதிரான நடத்தை பண்பாட்டை இயந்திர அறிவுகொண்டு எதிர்வு கூறக்கூடிய வலுவையும் இலங்கை அரசு கொண்டிருக்கும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

நன்றி:மாற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**


**46A**

2016 - 20

யானை ஒன்றில் 4 கால்களும் 2தந்தங்களும் ஆக மொத்தம் 6 உண்டு. யானை கூட்டத்தில் கால்களும் தந்தங்களும் ஆக மொத்தம் 132 ஆகும். எனவே கூட்டத்திலுள்ள யானைகளின் எண்ணிக்கையை அறிவதற்கு 132 இனை 6 இனால் வகுக்கும் போது கிடைக்கப்பெறும்.132 / 6=22.

எனவே சரியான விடை 1

2016 - 28




D யிலுள்ள பெரிய எண் 5 ஆகும்.
A யிலுள்ள பெரிய எண் 6 ஆகும்.
B யிலுள்ள பெரிய எண் 7 ஆகும்.
C யிலுள்ள பெரிய எண் 9 ஆகும்.

எனவே நுண்ணறிவினைப் பயன்படுத்தி மிகச் சிறிய எண் எனப்பார்க்கும்போது D யிலுள்ள பெரிய எண் 5 ஆகும். அதுவே மிகச் சிறிய எண ஆரம்பம் ஆகும். எனவே சரியான விடை 2

2016 - 34

1 தொடக்கம் 100 வரை எண்களை எழுதும் போது இலக்கம் 2

02 =12=22=32=42=52=62=72=82=92 மொத்தம் 10

20=21=22=23=24=25=26=27=28=29 மொத்தம் 10

நிகரமாக அமைவது 10+10=20

எனவே சரியான விடை 3

1 தொடக்கம் 25 வரையுள்ள எல்லா ஒற்றை எண்களையும் எழுதும் போது இலக்கம் 1 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது?

1=11=13=15=17=19=21


எனவே 8 தடவை 1 வந்துள்ளது.

எனவே சரியான

விடை 2

2017 - 18

முதற் சுற்றில் 1 எனக் கூறி எண்ணும் கமலன் இரண்டாம் சுற்றில் எண்ணும் போது கூறும் இலக்கம்




முதலாவது சுற்றில்

கமலன் 1=2=3=1=2=3.......................

இரண்டாவது சுற்றில் = 3

கமலன் எனவே சரியான விடை 3

**ஆசிரியர் அன்னமையா - 076 056 5786**

# தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரத்தை வெளிநாட்டவர்களுக்கு வழங்க முடியாது

## துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலத்துக்கு மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் எதிர்ப்பு



கொழும்பு,ஏப்.21

**கொழும்பு துறைமுக நகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலத்தின் ஊடாக துறைமுக நகர செயல்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஆணைக்குழுவுக்கு வெளிநாட்டவர்களை நியமிப்பதற்கான வாய்ப்பு ஏற்படும். இலங்கை என்பது இறையாண்மையுள்ள சுயாதீன நாடாகும். இங்கு வெளிநாட்டவர்கள் தாம் விரும்பியவாறு செயல்படுவதற்கும் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் அனுமதிக்கும் வகையிலான சட்டங்கள் உருவாக்கப்படக்கூடாது என்று மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.**

அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுகநகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலம் பல்வேறு சர்ச்சைகளைத் தோற்றுவித்திருக்கும் நிலையில், அதற்கு எதிராக மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையமும் உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருக்கிறது. இந்நிலையில் இச்சட்டமூலம் குறித்து அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தவை வருமாறு: தற்போது பல்வேறு தரப்பினரதும் மனுக்கள் மூலம் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்டிருக்கும் கொழும்பு துறைமுக நகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலமானது இந்நாட்டு மக்களின் இறைமைக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

உண்மையில் இது பிறிதொரு நாட்டுக்கான அரசமைப்பாகும். இதன்படி பொருளாதார ஆணைக்குழுவின் கீழ் துறைமுக நகர செயல்பாடுகள் முன்னெடுக்கப்படும். அந்த ஆணைக்குழு ஜனாதிபதியாலோ அல்லது அந்த விவகாரத்துக்குப் பொறுப்பான அமைச்சராலோ நியமிக்கப்படும். எனவே, இலங்கையர் அல்லாதோர் அந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்படக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேலும், மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் விடயத்தில் நீதியை நிலைநாட்டுவதற்குரிய கட்டமைப்புக்கு வெளிநாட்டவர்களை நியமிக்கமுடியாதெனின், இதுவிடயத்தில் தீர்மானமெடுக்கும் அதிகாரம் வெளிநாட்டவர்களுக்கு எவ்வாறு வழங்கப்பட முடியும்? அத்தோடு இதன் விளைவாக இறையாண்மை பெரிதும் கேள்விக்குட்படுத்தப்படுகின்றது.

இலங்கையர்கள் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரம் வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்பட முடியாது. அதேபோன்று, துறைமுக நகரத்தில் முன்னெடுக்கப்படும் வரிச்சலுகை முறைமைகளைப் பொறுத்தவரையில், அதனூடாக அரசாங்கம் எவ்வாறு பயனடைகின்றது?

ஆகவே, நிர்வாகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகிய விடயங்களில் இந்த சட்டமூலம் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இலங்கை என்பது இறையாண்மையுடைய சுயாதீன நாடாகும்.

இங்கு வெளிநாட்டவர்கள் தாம் விரும்பியவாறு செயல்படுவதற்கும் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் அனுமதிக்கும் வகையிலான சட்டங்கள் உருவாக்கப்படக்கூடாது. ஆகவே, பொருளாதாரத்தை வலுப்படுத்தும் அதேவேளை, நாட்டின் நிர்வாம் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றையும் பாதுகாப்பது அவசியமாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (எ)



# 340 கிலோ ஹெரோயினுடன் இலங்கைப் படகு பறிமுதல்

கேரளா,ஏப்.21

இந்திய போதைப்பொருள் கட்டுப்பாட்டு பணியகம். திங்களன்று கொச்சி கடற்பரப்பில் இலங்கைப் படகு ஒன்றிலிருந்து சுமார் 340 கிலோ கிராமம் ஹெரோயினை பறிமுதல் செய்துள்ளது.

இந்தக் கடத்தல் தொடர்பில் ஐந்து இலங்கைப் பிரஜைகளும் கைதுசெய்யப்பட்டுள்ளனரென இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப கட்ட விசாரணைகளில் ஈரானிய படகிலிருந்து இந்த போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்ட இலங்கைப் படகுக்கு கைமாற்றப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

ஐந்து பேரிடம் முன்னெடுக்கப்பட்ட ஆரம்ப விசாரணையில், இலங்கைப் படகு சிவப்பு நிற ஈரானிய படகிலிருந்து போதைப்பொருள் சரக்குகளை எடுத்ததாக தெரியவந்துள்ளது.

படகிலிருந்து கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் பெறுமதியானது சர்வதேச சந்தையில் 1,750 கோடி இந்திய ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.(எ)

# மீதமுள்ள பாடசாலைகளுக்கு அடுத்த வாரத்துக்குள் சீருடை



கொழும்பு,ஏப்.21

பாடசாலை விடுமுறைக்கு முன் சீருடைகளை விநியோகிக்க முடியாமல் போன மேல் மாகாண பாடசாலைகளுக்கு, அடுத்த வாரத்துக்குள் சீருடைகள் விநியோகிக்கப்படும் என்று பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், மேல் மாகாணத்தின் சில பாடசாலைகளுக்கு மாத்திரமே சீருடைகள் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

மேலும், நாட்டில் நிலவும் கொரோனா சூழ்நிலை காரணமாக உள்நாட்டு தொழில் அதிபர்கள் எதிர்கொண்ட சில சிக்கல்களினாலேயே சீருடை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டை முகவர் செயல்பாட்டை கர்தினால் தவிர்த்தல் வேண்டும்

## ஞானசார தேரர் காட்டம்

நுவரெலியா,ஏப்.21



அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஏப்ரல் 21 (ஈஸ்டர்) குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிட்டுள்ள கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, இனியாவது இரட்டை முகவராக செயல்படுவதை கர்தினால் தவிர்த்துக்கொள்ள வேண்டும். ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் மீது உள்ள முரண்பாட்டை அவர் தனிப்பட்ட முறையில் பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும். அதனை விடுத்து ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்துவது முறையற்றது என பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

நுவரெலியா அமோகராம விகாரையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்:

இஸ்லாமிய அடிப்படைவாதம் உலகளாவிய ரீதியில் வியாபித்துள்ளது. அறவழி மதக் கொள்கைக்கு அப்பாற்பட்டவர்கள் இஸ்லாமிய மதக் கொள்கையை தவறான வகையில் புரிந்துகொண்டு அடிப்படைவாத செயல்பாடுகளில் ஈடுபட்டு ஏனைய மதங்கள் மீது வேறு தாக்குதல்களை முன்னெடுக்கிறார்கள்.

இலங்கையில் இஸ்லாமிய அடிப்படைவாதம் அரச ஆதரவுடன் தலைதூக்குகிறது என்பதை ஆரம்ப காலத்திலிருந்து ஆதாரத்துடன் தெரிவித்தோம்.

எமது கருத்தை அரச தலைவர்களும், இஸ்லாமிய மதத் தலைவர்களும், இஸ்லாமிய அரசியல்வாதிகளும், ஏனைய மதத் தலைவர்களும் பொருட்படுத்தவில்லை.

இஸ்லாமிய அடிப்படைவாதம் குறித்து நாங்கள் குறிப்பிட்ட கருத்தை முஸ்லிம் அரசியல்வாதிகள் தங்களின் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தி எங்களை இனவாதிகளாக சித்திரித்து அரசியல் இலாபம் தேடிக்கொண்டனர்.

இஸ்லாமிய அடிப்படைவாதத்தால் எதிர்காலத்தில் தோற்றம் பெறும் பாரதூரமான விளைவுகள் குறித்து எவரும் அக்கறை கொள்ளவில்லை.

அனைத்துத் தரப்பினரது கவனயீனத்தையும், 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் வெளிச்சத்திற்கு கொண்டு வந்தது.

இஸ்லாமிய அடிப்படைவாதம் இலங்கையின் எத்தன்மையில் வலுப்பெற்றுள்ளது என்பதை 2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரச தலைவர்களும், ஏனைய மதத் தலைவர்களும், முஸ்லிம் அரசியலவாதிகளும் புரிந்துகொண்டனர். குண்டுத்தாக்குதலில் அப்பாவி மக்கள் மாத்திரமே பலியானார்கள்.

இஸ்லாமிய அடிப்படைவாதக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் நடத்தப்பட்டது என்பது பல்வேறு விசாரணைகள் ஊடாகவும், குண்டுத்தாக்குதலில் உயிரிழந்த அடிப்படைவாதிகளின் காணொலி ஆதாரங்கள் ஊடாகவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஐ.எஸ்.ஐ.எஸ் கொள்கையால் ஈர்க்கப்பட்டவர்கள் தாக்குதல்களை முன்னெடுத்தனர் என்று கர்தினால் ஆரம்பத்தில் குறிப்பிட்டார்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்று இன்றுடன் இரண்டு வருடங்கள் பூர்த்தியாகுகின்றன.

இவ்வாறான நிலையில் ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் மதக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்டது அல்ல. இந்தத்தாக்குதல் அரசியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டது என கர்தினால் குறிப்பிட்டுள்ளமையை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் மீது உள்ள பிரச்னைகளை அவர் தனிப்பட்ட முறையில் பேசி தீர்த்துக் கொள்ள வேண்டும். தனிப்பட்ட பிரச்னைகளுக்கு ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் விவகாரத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். கர்தினால் ஆண்டகை இவ்விடயத்தில் இரட்டை முகவராகச் செயல்படுகிறார்- என்றார். (எ)

# அரசாங்க நிர்வாகத்துக்கு கோட்டாபய பொருத்தமற்றவர்

## 2019ஆம் ஆண்டே குறிப்பிட்டோம் என்கிறார் தம்பர அமில தேரர்

கொழும்பு,ஏப்.21



**அரசாங்க நிர்வாகத்துக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொருத்தமற்றவர் என்பதை 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் கால பிரசார மேடைகளில் பகிரங்கமாகக் குறிப்பிட்டோம்.**

நாம் குறிப்பிட்டதை 69 இலட்சம் மக்கள் தற்போது அனுபவ ரீதியில் உணர்ந்து கொண்டுள்ளனர். சுபீட்சமான கொள்கைத் திட்டத்துக்கு எதிரான கொள்கைத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன என சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் உறுப்பினர் தம்பர அமில தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் சமூக நீதிக்கான தேசிய அமைப்பின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சியை சர்வதேசம் ஏற்கவில்லை. இதனைக் கடந்த மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இடம்பெற்ற 46 ஆவது கூட்டத்தொடர் ஊடாக அறிந்து கொள்ளலாம்.

யுத்த காலத்தில் இடம்பெற்றதாகக் குறிப்பிடப்பட்ட யுத்தக் குற்றச்சாட்டுக்களைக் காட்டிலும் அதிகமான குற்றச்சாட்டுக்கள் 2019 நவம்பர் மாதத்துக்குப் பிறகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பலவீனமாக அரச நிர்வாகத்தை அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் ஊடாக சுயாதீன ஆணைக்குழுக்களின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டமை, அரச திணைக்களங்களுக்கு சிவில் சேவைகள் குறித்து எவ்விதமான ஆளுமையும் இல்லாத இராணுவ அதிகாரிகள் தலைவர்களாகவும், உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டமை, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட இனவாதச் செயல்பாடுகள் மற்றும் வெறுக்கத்தக்க பேச்சுக்கள் ஆகியவற்றை சர்வதேசம் அவதானித்து இலங்கையை புறக்கணித்துள்ளது.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இச்சட்டமூலம் தொடர்பில் மாறுபட்ட பல கருத்துக்கள் குறிப்பிடப்படுகின்றன. துறைமுக நகரில் சீனாவுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்கும் போது அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளைப் பகைத்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். இலங்கையின் அரசமைப்புக்கு முரணான வகையில் பல விடயங்கள் சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரச நிர்வாகத்துக்குப் பொருத்தமற்றவர் என்பதை 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் கால பிரசார மேடைகளில் பகிரங்கமாகக் குறிப்பிட்டோம். நாம் குறிப்பிட்டதை நாட்டு மக்கள் ஏற்கவில்லை. தேர்தலில் வெற்றி பெறுவதற்காக பல பொய்யான குற்றச்சாட்டுக்கள், எண்ணிலடங்காத வாக்குறுதிகள் பல முன்வைக்கப்பட்டன. நாம் குறிப்பிட்ட விடயத்தை 69 இலட்சம் மக்கள் இன்று அனுபவ ரீதியில் புரிந்து கொண்டுள்ளனர் - என்றார். (எ)

# அரசியல் அதிகாரத்தை ஸ்திரப்படுத்த ஜனநாயக விரோதப்போக்கில் அரசாங்கம்

## எரான் விக்கிரமரத்ன குற்றச்சாட்டு

கொழும்பு,ஏப்.21



அரசாங்கம் பல விடயங்களை பாராளுமன்ற விவாதமின்றி பின்வாசல் வழியாக பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தி நிறைவேற்றிக் கொள்ள முயற்சிக்கிறது.

அரசியல் அதிகாரத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ள நீதிமன்றத்தின் அதிகாரங்களை மீறி ஜனநாயகத்துக்கு விரோதமான செயல்பாடுகளையே தற்போது முன்னெடுக்கிறது என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

அரசாங்கம் பல விடயங்களை பாராளுமன்ற விவாதம் இன்றி பின்வாசல் வழியாக பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்தி நிறைவேற்றிக் கொள்ள முயற்சிக்கிறது.

அரசியல் அதிகாரத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ள நீதிமன்றத்தின் அதிகாரத்தை இரத்து செய்து ஜனநாயகத்திற்கு விரோதமாக செயல்பட முயற்சிக்கின்றனர். இவ்வாறான செயல்பாடுகள் இலங்கையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடம்பெற்றதில்லை.

பாராளுமன்ற செயலாளர் நாயகம், சபாநாயகருக்கு அறிவிக்காமல் எந்தவொரு விடயத்தையும் பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளடக்க முடியாது. எனினும், துறைமுக நகர சட்டமூலம் அதில் சேர்க்கப்பட்டுள்ளது. பாராளுன்றத்தில் பெரும்பான்மையை உபயோகித்து இதனை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்று எதிர்பார்த்திருக்கக்கூடும்.

2015 - 2019 ஆம் ஆண்டு காலத்தில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

இதன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டவுடன் மீண்டுமொரு ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இதன் மூலம் அரசாங்கத்திலுள்ள பலரும், அரசாங்கத்துக்கு நெருக்கமானவர்களும் பல வழக்குகளிலிருந்தும் விடுவிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அரசாங்கம் பல செயல்பாடுகளையும் மறைமுகமாக செய்ய முற்படுகிறது- என்றார். (எ)

# போதையில் சாரத்தியம்: 905 பேர் கைதாகினர்

கொழும்பு,ஏப்.21

ஏப்ரல் 18 ஆம் திகதி நண்பகல் 12 மணிமுதல் நேற்றுக் காலை 6 மணிவரையான காலப்பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கையில் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 905 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

இதன்போது, 6,898 மோட்டார் வாகன வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன என பொலிஸார் தெரிவித்தனர்.

இவற்றுள் அதிகமான வழக்குகள் மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோக்களுடன் தொடர்புடையவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மனித குலத்துக்கு விரோதமான குற்றங்களை சீனா இழைக்கிறது!

### மனித உரிமைகள் கண்காணிப்பகம்

பீஜிங், ஏப். 21

உய்குர் இன சிறுபான்மையினர், பிற துருக்கிய முஸ்லிம்களுக்கு எதிரான ஒடுக்குமுறையில் சீனா "மனித குலத்திற்கு எதிரான குற்றங்களில்" ஈடுபட்டுள்ளது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்பகம் திங்களன்று வெளியிட்ட 53 பக்கங்கள் கொண்ட அறிக்கையில் இது தொடர்பில் விரிவாக கூறப்பட்டுள்ளது.

இதில், காணாமல் ஆக்கப்பட்டவர்கள், வெகுஜன கண்காணிப்பு, குடும்பங்களை பிரித்தல், சீனாவுக்கு கட்டாயமாக திரும்புவது, கட்டாய உழைப்பு, பாலியல் வன்முறை மற்றும் இனப்பெருக்க உரிமை மீறல்கள் ஆகியவையும் அடங்கும்.

ஸ்டான்போர்ட் சட்டப் பள்ளியின் மனித உரிமைகள் மற்றும் மோதல் தீர்க்கும் நிலையத்தின் உதவியுடன் எழுதப்பட்ட இந்த அறிக்கை, துருக்கிய முஸ்லிம்களை பீஜிங் ஒடுக்குவது "ஒரு புதிய நிகழ்வு அல்ல" என்றாலும், அது முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

10 இலட்சம் சிறுபான்மையின மக்கள் அரசியல் கல்வி முகாம்கள், முன்கூட்டிய தடுப்பு காவல் நிலையங்கள் மற்றும் சிறைச்சாலைகள் உட்பட 300 முதல் 400 நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று அறிக்கை குறிப்பிடுகின்றது.

2017 ஆம் ஆண்டு முதல் பீஜிங் அதன் ஒடுக்குமுறையை தீவிரப்படுத்தியபோது, சீனாவில் நடந்த அனைத்து கைதுகளில் ஜின்ஜியாங்கில் மாத்திரம் 21 சதவீதம் பதிவானது. அது மாத்திரமன்றி 2017 முதல், சீன அரசாங்கம் இப்பகுதியில் மூன்றில் இரண்டு பங்கு மசூதிகளை சேதப்படுத்த அல்லது அழிக்க பல்வேறு சாக்குப்போக்குகளைப் பயன்படுத்தியுள்ளது - என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## சினோபார்ம் தடுப்பூசி 90 வீதத் திறன் பெற்றது!




அபுதாபி, ஏப். 21

சினோபார்ம் தடுப்பூசிகள் 90 வீதம் தொற்றைத் தடுக்கும் திறன் பெற்றவை. அந்தத் தடுப்பூசியால் எந்த மரணமும் இதுவரை பதிவாகவில்லை என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

அபுதாபி பொது சுகாதார மையத்தின் ஆய்வின் முடிவிலேயே இந்தத் தகவல் வெளிப்பட்டது.

சினோபார்ம் தடுப்பூசி மருந்தின் விளைவுகள் குறித்து அபுதாபி பொது சுகாதார மையம் ஆய்வு செய்தது. இதன் முடிவில், சினோபார்ம் மருந்தை ஊசி மூலம் செலுத்திக் கொண்டவர்களுக்கு நோய் தொற்று காராணமாக இலேசான பாதிப்புக்கள் தென்பட்டன.

இதற்காக அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற வேண்டிய அவசியம் இல்லை. 2 டோஸ்களையும் ஏற்றிக் கொண்டவர்களுக்கு தொற்றுப் பாதிப்பு கணிசமாக குறைந்துள்ளது.

சினோபார்ம் நோயைத் தடுக்க 90வீதத் திறன் கொண்டுள்ளது. இந்தத் தடுப்பூசியால் எந்த உயிரிழப்பும் பதிவாகவில்லை. இது மிகவும் பாதுகாப்பாக உள்ளது என்றும் அபுதாபி பொது சுகாதார மையம் தெரிவித்துள்ளது. (ஐ)

# வளங்கள் நியாயமாக பகிரப்பட்டால் சில மாதங்களில் தொற்றை தடுக்கலாம்!

### உலக சுகாதார நிறுவனம் சொல்கிறது




ஜெனிவா, ஏப். 21

தற்போது கிடைக்கக்கூடிய வளங்களை உலகம் முழுவதும் நியாயமான முறையில் பகிர்ந்துகொண்டால் அடுத்துவரும் மாதங்களில் உலகெங்கும் கொரோனா வைரஸ் தொற்று நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என்று உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் கெப்ரேயஸ் தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் நேற்று முன்தினம் செய்தியாளர் சந்திப்பை அவர் நடத்தினார்.

சர்வதேச காலநிலை மாற்ற செயற்பாட்டாளர் கிரெட்டா துன்பெர்க் சுவீடனில் இருந்து இந்த செய்தியாளர் மாநாட்டில் இணைய நேரலை வழியில் இணைந்து கொண்டார்.

தடுப்பூசி தேசியவாதம் ஒரு மோசமான சுயநலவாத செயல்பாடு என இதன்போது அதனோம் கூறினார். வளரும் நாடுகளில் அதிகம் பாதிக்கப்படக்கூடிய தரப்பினருக்கு தடுப்பூசி இல்லாமல் திண்டாடும் நிலையில் பணக்கார நாடுகள் தங்கள் இளைய குடிமக்களுக்கு தடுப்பூசியில் முன்னுரிமை அளிப்பது நியாயமற்றது.

கொவிட் 19 தொற்று நோயை சில மாதங்களில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான வளங்கள் எங்களிடம் உள்ளன. ஆனால், அவற்றை தொடர்ச்சியாகவும் சமமாகவும் பகிர்ந்து பயன்படுத் தும்போதே தொற்று நோயைக் கட்டுப்படுத்துவது சாத்தியம். எனினும், உலகெங்கும் 25 முதல் 59 வய துக்கு இடைப்பட்டவர்களிடையே ஆபத்தான வகையில் கொரோனா பரவல் அதிகரித்து வருவது குறித்து அவர் கவலை தெரிவித்தார்.

கொரோனா வைரஸின் புதிய பிறழ்வுகள் இதற்குக் காரணமாக இருக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டார். உலகம் முழுவதும் இந்த் தொற்று நோயால் 10 இலட்சம் இறப்புகளை முதலில் 9 மாதங்களில் எதிர்கொண்டது. கொரோனா இறப்புக்கள் 20 இலட்சத்தை அடைய 4 மாதங்கள் ஆயின. இப்போது 3 மாதங்களில் 10 இலட்சம் இறப்புக்கள் பதிவாகியுள் ளன எனவும் அவர் சுட்டிக்காட்டி னார்.

அதிக வருமானம் கொண்ட நாடுகளில் நான்கு பேரில் ஒருவருக்கு இப்போது கொவிட்-19 தடுப்பூசி போடப்பட்டுள்ளது. ஆனால், ஏழை நாடுகளில் 500இற்கும் மேற்பட்டவர்களில் ஒருவருக்கு மட்டுமே ஒரு தடுப்பூசி இதுவரை கிடைத்துள்ளதாக இந்த செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற காலநிலை செயல்பாட்டாளர் கிரெட்டா துன்பெர்க் கூறினார்.

மேலும், பணக்கார நாடுகள், ஏழை நாடுகள் என்ற வித்தியாசம் இல்லாமல் தடுப்பூசித் திட்டத்தில் பாதிக்கப்படக் கூடிய தரப்பினருக்கு முன்னுரிமை அளிப்பதே தார்மீக ரீதியாக சரியான விடயம். இயற்கையை அழிப்பதை நாம் நிறுத்தாவிட்டால் அடிக்கடி இவ்வாறான பேரழிவு தரும் தொற்றுநோய்களை நாங்கள் அனுபவிக்க நேரும். விலங்குகளிடம் இருந்து வைரஸ் மனிதர்களுக்குப் பரவி விரிவடைவதற்கு சாதாகமான சூழலை நாங்கள்தான் உருவாக்குகிறோம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

## கைதான போராட்டக்காரர்கள் மீது கடும் சித்திரவதைகள் கட்டவிழ்ப்பு!

யங்கூன், ஏப். 21

மியன்மாரில் இராணுவத்திற்கு எதிராக போராடுவோரை கைது செய்து, அவர்கள் மீது மிக மோசமான தாக்குதல்கள் - சித்திரவதைகளை இராணுவம் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

இவ்வாறு சித்திரவதைகளுக்கு இலக்கான 4 இளைஞர்கள், 2 யுவதிகளின் புகைப்படங்களை இராணுவத்தின் செய்தி நிறுவனமே வெளியிட்டுள்ளது. இந்தப் புகைப்படங்கள் போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கான எச்சரிக்கையாகக் கருதப்படுகின்றது.

இதேவேளை, மியன்மார் இராணுவத்தின் மனிதத்தன்மையற்ற தாக்குதலால் பாதிக்கப்பட்ட இளைஞர்களின் புகைப்படங்கள் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன.

போராட்டக்காரர்கள் இராணுவம் வெளியிட்ட படங்களுடன், அவர்களின் முன்னைய படங்களையும் இணைத்து சமூகவலைத்தளங்களில் பகிரப்படுகின்றது. இதனால், இராணுவம் எதிர்பார்த்ததற்கு மாறாக இந்தப் புகைப்படங்கள் வெளியானதையடுத்து போராட்டங்கள் இன்னும் வலுப்பெறத் தொடங்கியுள்ளன. (ஐ)






## அமெரிக்க முன்னாள் உப ஜனாதிபதி மரணம்!

வாஷிங்டன், ஏப். 21

அமெரிக்காவின் முன்னாள் உப ஜனாதிபதி வோல்டர் மொண்டேல் 93ஆவது வயதில் மினியாபொலிஸ் நகரில் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

மொண்டேல் 1976 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றதற்காக ஜிம்மி கார்டரின் நிர்வாகத்தில் உப ஜனாதிபதியாக இருந்தார். நான்கு ஆண்டுகளின் பின்னர் தோல்வியடைந்து அப் பதவியிலிருந்து வெளியேறினார்.

ஜனநாயகக் கட்சியின் வழிவந்த, மொண்டேல், இராஜதந்திரியாகவும், வழக்கறிஞராகவும் செயல்பட்டிருந்தார். முன்னதாக அவர், 164 முதல் 1976 வரை மின்னசொட்டாவின் செனெட்டராகவும் பதவி வகித்திருந்தார். (ஐ)

## தனிமைப்படுத்தலுக்கு இணங்காவிடின் அபராதம்!

பாரிஸ், ஏப். 21

பிரேஸில், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் பரவி வருகின்ற வைரஸ் திரிபுகளின் தொற்றைத் தடுக்கும் நடவடிக்கைகளை பிரான்ஸ் இறுக்குகிறது.

பிரேஸில், ஆர்ஜென்ரீனா, சிலி, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் இருந்து வரும் பயணிகள் பத்து தினங்கள் கட்டாய சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாவார்கள். அதனை ஏற்க மறுத்து மீறுகின்ற எவரும் ஆயிரத்து 500 யூரோக்களை அபராதமாக செலுத்த வேண்டி இருக்கும். அத்தகையவர்களைத் தனிமைப்படுத்தி வைக்கும் இடங்களைப் பொலிஸாரும் ஜொந்தாமி னரும் கண்காணிப்பார்கள். இரண்டாவது முறை கட்டுப்பாட்டை மீறினால் அபராதம் மூவாயிரம் யூரோக்கள் ஆகும்.

அரசாங்கப் பேச்சாளர் கப்ரியேல் அட்டால் இத்தகவல்களை வெளியிட்டிருக்கிறார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஞ்சனுக்கு பொதுமன்னிப்பு ஜனாதிபதியிடம் கேட்ட சஜித்

கொழும்பு, ஏப். 21

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பொது மன்னிப்பு வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ரஞ்சனின் நிலையை கருத்தில் கொண்டு அவருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பளிப்பது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற வளாகத்தில் நேற்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின்போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எழுத்து பூர்வ கோரிக்கையை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி தனக்கு அறிவித்ததாக அவர் மேலும் கூறினார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் 4 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு தற்போது அங்குனுகொலபெலெச சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தமுறை மேதின பேரணிகள் இல்லை

கொழும்பு, ஏப். 21

இம்முறை அரசியல் கட்சிகள் மேதின ஊர்வலத்தை நடத்துவதில்லையென தீர்மானித்துள்ளதாக இராணுவத்தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். கட்சி பிரதிநிதிகளுடனான சந்திப்பில் இந்த இணக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

# அதிவேக நெடுஞ்சாலைகளின் மூலம் 11 நாள்களில் ரூ. 350 மில். வருமானம்

கொழும்பு, ஏப். 21

தமிழ் - சிங்களப் புத்தாண்டு காலப்பகுதியில் நாட்டின் அதிவேக நெடுஞ்சாலைகளில் 1,236,288 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் பயணித்ததுடன், இதனால் சுமார் 350 மில்லியன் ரூபாய் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரல் 8 தொடக்கம் 18 வரையான காலப்பகுதியிலேயே இந்த வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஏப்ரல் 10 ஆம் திகதி அதிக எண்ணிக்கையிலான வாகனங்கள் அதிவேக நெடுஞ்சாலையைப் பயன்படுத்தியுள்ளன. இதன்படி அன்றையதினம் மொத்தம் 141,187 வாகனங்கள் நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன.

இதேவேளை, மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் மீரிகம - குருநாகல் பிரிவு மே மாதத்தில் திறக்கப்படவுள்ளன. இதனால் 39.7 கிலோ மீற்றர் தூரத்தை 25 நிமிடங்களுக்குள் கடக்க முடியும் என அவர் தெரிவித்தார். (எ)

# அரிசி இறக்குமதி செய்வதற்கு ஜனாதிபதி அனுமதிக்கமாட்டார்

## அமைச்சர் பந்துல சொல்கிறார்

கொழும்பு, ஏப். 21

அரசாங்கத்தின் கொள்கை அடிப்படையில் அரிசி இறக்குமதியை ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ ஒருபோதும் அனுமதிக்கமாட்டார் என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரிசி இறக்குமதிக்கு ஜனாதிபதி அனுமதி வழங்கினால் விலையை எளிதில் குறைக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், புத்தாண்டு காலங்களில் நாடு மற்றும் சிவப்பு அரிசி ஆகியவற்றை 100 ரூபாய்க்கு குறைவாக வழங்க முடியும். ஆனால், பால் சம்பாவின் விலையை மட்டும் கட்டுப்படுத்த முடியாது- என்றார். (எ)

## அரசியல் பழிவாங்கல் போர்வையில்

# சட்டக் கட்டமைப்பு, ஜனநாயகத்தை சவாலுக்குட்படுத்துகிறது அரசாங்கம்

## ஐ.ம.ச. எம்.பி. பாகீர் மாக்கார் சாடல்

கொழும்பு, ஏப். 21

**கொலை, ஊழல் மோசடிகளுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்குகளை அரசியல் பழிவாங்கல் எனக்குறிப்பிட்டு சட்டமா அதிபர், நீதிபதிகள், விசாரணைகளை முன்னெடுத்த ஏனைய அதிகாரிகளைத் தவறிழைத்தவர்களாக்குவதற்கு அரசாங்கம் முற்படுகின்றது. இதன்மூலம் நாட்டின் சட்ட கட்டமைப்பு, ஜனநாயகம் சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளன என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாகீர் மாக்கார் தெரிவித்தார்.**



கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதன் மூலம் நாட்டின் சட்டத்துறை உள்ளிட்ட பல துறைகள் சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளன. இதன் ஊடாக ஊழல் மோசடிகளுடன் தொடர்புடையவர்களை வழக்கு விசாரணைகளிலி ருந்து விடுவிக்க முயற்சிக்கின்றனர்.

அத்தோடு அரசாங்கத்தை விமர்சிக்கின்ற பிரபல எதிர்க்கட்சி உறுப்பினர்களை அரசியலிலிருந்து நீக்குவதற்காக அவர்களின் குடியுரிமையை நீக்க முயற்சிக்கப்படுகிறது. இவ்வாறான செயல்பாடுகள் மூலம் ஜனநாயக விரோத பாதையிலேயே அரசாங்கம் பயணிக்கிறது.

கொலை, ஊழல் மோசடிகளுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்குகளை அரசியல் பழிவாங்கல் எனக்குறிப்பிட்டு சட்டமா அதிபர், நீதிபதிகள், விசாரணைகளை முன்னெடுத்த ஏனைய அதிகாரிகளைத் தவறிழைத்தவர்களாக்க முற்படுகின்றனர்.

ஜனநாயக நாடுகள் பட்டியலில் 2017 இல் 62 ஆம் இடத்தைப் பிடித்திருந்த எமது நாடு தற்போது 68 ஆம் இடத்துக்குப் பின்தள்ளப்பட்டுள்ளது. இதன் ஊடாக அரசாங்கம் எந்தளவுக்கு ஜனநாயகத்துக்கு விரோதமாகச் செயல்படுகிறது என்பது தெளிவாகிறது. சட்டத்தரணிகள் சங்கம் உள்ளிட்ட பலர் இது தொடர்பில் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

நாட்டின் சட்ட கட்டமைப்பு, ஜனநாயகம் என்பன சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இந் நிலையில் நாட்டு மக்கள் இது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும்- என்றார். (எ)



# நாமல் குமார கைது

கொழும்பு, ஏப். 21

ஊழல் ஒழிப்புச் செயலணியின் நடவடிக்கைப் பிரிவு பணிப்பாளர் நாமல் குமாரவை வரகாபொல பொலிஸார் கைது செய்தனர்.

ஒரு நபர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்கு நாமல் குமார, வரகாபொல பொலிஸ் நிலையத்துக்கு நேற்றுக்காலை வருகை தந்திருந்தார்.

இதன்போதே அவரை பொலிஸார் கைது செய்தனர். (எ)

# ஆதன பெயர் மாற்றம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 20 இடுகாட்டு வீதி, 31 என்னும் இலக்கத்தைக் கொண்ட ஆதனம் அந்தோனிப்பிள்ளை பெண் தங்கமுத்து என்னும் பெயரில் மாநகர சபை ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் இலக்கம் 31, 3ஆம் குறுக்குத்தெரு நாவந்துறை என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி ஜெயராஜ் பற்றீசியா தே.அ.அ.இல 815624157V என்பவர் பிரசித்த நொத்தாரிஸ் திருமதி ஜெயச்சித்திரா சிறிதரன் முகதாவில் 2019.06.07 ஆம் திகதி 3713 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதிப்படி தனக்கு சொந்தமானதாக்கியுள்ளார்.

ஆதன விபரம் வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாண பகுதி வண்ணார் பண்ணை கோவிற் பற்று வண்ணார் பண்ணை தென்மேற்கு இறை இது யாழ்ப்பாண பிரதேச செயலகப் பகுதியில் யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்டது. J/85 கிராம அலுவலர் பிரிவில் உள்ள "பாராயடி" நிலப்பரப்பு பூச்சியம் குளி பூச்சியம் மூன்று தசம் ஐந்து ஏழு (நில பர 0 குளி 03.57) இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் A.சந்தியாப்பிள்ளை அவர்களால் 1982.04.24 ஆம் திகதி 651/1 ஆம் இலக்கத்தில் அளந்த படத்தில் லொட் 1 என காட்டப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பு 0 குளி 03.57 ஆகும்.

**எல்லைகள்:**

கிழக்கு - 3ஆம் குறுக்குத்தெரு
வடக்கு - மரிசல் சிந்தாத்துரையின் ஆதனம்
மேற்கு - மரியாம்பிள்ளை செபஸ்ரியின் உரிமைக்காரரின் ஆதனம்
தெற்கு - திபுதியன் பெண் மரியஉத்தரியத்தின் ஆதனம். இதடங்கலும்.

தற்போது இவ் ஆதனத்தை ஜெயராஜ் பற்றீசியா என்பவர் தனது பெயருக்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடாக எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனம் ஜெயராஜ் பற்றீசியா என்னும் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதன பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர், மாநகரசபை.**

# பண்டிகை காலத்தில் தொற்றாளர் அதிகரிப்பு நான்கு முதல் ஆறு வாரங்களில் வெளிப்படும்

## மருத்துவர் சுதத் சமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 21

பண்டிகைக் காலங்களில் பொதுமக்களின் நடமாட்டம் காரணமாக கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்திருந்தால். அது நான்கு முதல் ஆறு வாரங்களில் வெளிப்படும் என தொற்றுநோயியல் பிரிவின் பிரதானி வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

தொற்று ஏற்பட்டவர்களுக்கு இரண்டு வாரங்களுக்குப் பின்னரே அறிகுறிகளைக் காண்பிப்பதால் நான்கு முதல் ஆறு வாரங்களில் மட்டுமே அதிகரிப்பை கண்டறிய முடியும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, நோயாளிகள் அதிகரிப்பைத் தொடர்ந்து அடுத்த மூன்று வாரங்கள் மிகவும் அவதானமாக மக்கள் செயல்பட வேண்டும் என கொரோனா தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு நிலையத்தின் தலைவர், இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும், குறித்த மூன்று வாரங்களில் கொரோனா நோயாளிகளை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கவுள்ள நிலையில் இந்தக் காலகட்டத்தில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியது அவசியம் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூநகரி பள்ளிக்குடாவில் 150 கிலோ கஞ்சா மீட்பு!

கிளிநொச்சி,ஏப்.21

கிளிநொச்சி பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளிக்குடா பகுதியில் பொலிஸ் விஷேட அதிரடிப்படையினரால் ஒரு தொகை கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது.

கிளிநொச்சி விஷேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து இவ்வாறு கஞ்சா மீட்கப்பட்டது என பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.- மன்னார் வீதிக்கு அண்மித்த பகுதியிலுள்ள பற்றை ஒன்றில் இவ்வாறு மறைத்து வைக்கப்பட்டிருந்த பொதிகளை நேற்று அதிகாலை சோதனையிட்டபோதே மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட கஞ்சா பொதிகள் சுமார் 150 கிலோ நிறையுடையவை எனவும், மீட்கப்பட்ட கஞ்சா பொதிகளை விஷேட அதிரடிப்படையினர் எடுத்து சென்றுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளுக்காக பூநகரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை எனவும், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# வீதி விபத்துக்களில் சிக்கி 7 நாள்களில் 70 பேர் பலி!

## அஜித் ரோஹண அதிர்ச்சித் தகவல்

கொழும்பு,ஏப்.21

**நாடு முழுவதும் 7 நாள்களில் பதிவான வீதி விபத்துக்களால் 70 பேர் உயிரிழந்தனர்.**



கடந்த 13 ஆம் திகதி காலை 6 மணி முதல் நேற்றுக் காலை 6 மணி வரையான காலப்பகுதியில் பதிவான விபத்துக்கள் காரணமாகவே இவ்வாறு உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

முன்னதாக வீதி விபத்துக்கள் காரணமாக அன்றாடம் 6 அல்லது 7 பேர் உயிரிழந்தனரென பதிவாகிய நிலையில் தற்சமயம் அந்த எண்ணிக்கை 9 முதல் 10 ஆக உயர்வடைந்துள்ளது.

இது இவ்வாறே தொடருமானால் ஆண்டொன்றுக்கு 3,650 பேர் வீதி விபத்துக்கள் காரணமாக உயிரிழக்கும் நிலை ஏற்படும்.

எனவே, வாகனச் சாரதிகள் மற்றும் பாதசாரிகள் மிகவும் அவதானத்துடன் செயல்படுமாறு அஜித் ரோஹண அறிவுறுத்தியுள்ளார்.

கடந்த மார்ச் 4 ஆம் திகதி மாத்திரம் வீதி விபத்துக்கள் காரணமாக 15 பேர் உயிரிழந்தனர் துடன், இந்த ஆண்டு இதுவரை மொத்தம் 3,556 வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளன என அவர் சுட்டிக்காட்டினார். (எ)

# 52 கொரோனா தொற்றாளர் அடையாளம் 2 ஆடையகங்கள் மற்றும் வங்கிக்கு பூட்டு

கொழும்பு,ஏப்.21

புத்தாண்டுக்குப் பின்னர் இரண்டு ஆடையகங்கள் மற்றும் வங்கியொன்றிலிருந்து 52 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என கொரோனா பரவலைத் தடுக்கும் தேசிய செயல்பாட்டு மையம் நேற்றுத் தெரிவித்துள்ளது.

கடந்த 11 ஆம் திகதி ஆடையகத்தில் பணிபுரியும் ஒருவருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து, மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் 17 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதேவேளை, கொழும்பிலுள்ள அரச வங்கியொன்றில் 300 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 35 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டது என அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, வங்கியில் கண்டறியப்பட்ட கொரோனா நோயாளர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் குறித்து ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும், கொரோனா நோயாளர்கள் கண்டறியப்பட்ட ஆடையகங்கள் மூடப்பட்டுள்ளதுடன் கிருமிநீக்கம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)

# வலி.கிழக்கு தவிசாளர் திரேஷிற்கு எதிராக தொல்லியல், வீதி அதிகார சபை வழக்குகள்

யாழ்ப்பாணம், ஏப் 21

நிலாவரையில் தொல்லியல் திணைக்களத்தின் அரச கடமைக்கு தடை ஏற்படுத்தினார் என தவிசாளர் தியாகராஜா நிரோஷிற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பெயர்ப்பலகையினை அகற்றினார் எனக் குற்றச்சாட்டப்பட்ட ஏற்கனவேயுள்ள வழக்குகளுமாக மத்திய அரசின் தாபனங்களால் தாக்கல் செய்யப்பட்ட இரு வேறு வழக்குகள் மல்லாகம் நீதிமன்றில் இன்று புதன்கிழமை எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

இவ் வழக்குகளுக்கான அழைப்பாணைகள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷிடம் அச்சுவேலி பொலிஸாரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

நிலாவரை கிணற்றுப் பகுதியில் தொல்லியல் திணைக்களமும் இராணுவமும் இணைந்து இரண்டு தடவைகள் சந்தேகத்திற்கிடமான முறையில் அகழ்வுப் பணிகளை முன்னெடுத்திருந்தனர். இவ் அகழ்வுப் பணிகள் மக்களின் கடும் எதிர்ப்பினால் கைவிடப்பட்டன. மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கு தவிசாளரே காலரணம். பலரை அழைத்து தொல்லியல் திணைக்களத்தின் அரச கடமைக்கு தடை ஏற்படுத்தினார் என அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் தொல்லியல் திணைக்களத்தினர் முறையிட்டனர்.

அதனடிப்படையில், தவிசாளர் தியாகராஜா நிரோஷ்க்கும் தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் நளின் வீரரத்தினவுக்கும் இடையில் மல்லாகம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், அச்சுவேலி பொலிஸ் பொறுப்பதிகாரி உள்ளடங்கியோர் சமரசத்திற்கு முயற்சித்தனர். தவிசாளரை நிலாவரை விடயத்தில் தலையிடக்கூடாது எனக் கூறி சுமார் மூன்று மணிநேரம் விசாரணைகளும் இடம்பெற்றன. இதற்கு தவிசாளர் உடன்படவில்லை.

தவிசாளர், தொல்லியல் திணைக்களம் மேற்கொள்ளவுள்ள முயற்சிகள் தொடர்பில் மக்களுக்கு விளக்கமளிக்குமுகமாக தமக்கு உத்தியோகபூர்வமாக தெரியப்படுத்துவதுடன் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் அனுமதி பெறப்படவேண்டும் என விட்டுக்கொடுப்பின்றி வலியுறுத்திய நிலையில் தொடர்ந்து தவிசாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடிவு எடுக்கப்பட்டது.

பின்னர் தொல்லியல் திணைக்களத்திற்கு பொறுப்பான அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தலைமையில் கொழும்பில் இடம்பெற்ற உயர்மட்ட கலந்துரையாடலில் அமைச்சர், தொல்லியல் திணைக்கள அதிகாரிகளுக்கு பிரதேச சபை , பிரதேச செயலகம் போன்றவற்றிற்கு அறிவித்து மாவட்ட அபிவிருத்திக்குழுக்களின் அனுமதி பெற்றே நிலாவரை மற்றும் உருத்திரபுரம் பகுதியில் செயற்படும் என அறிவித்திருந்தார். எனினும் தற்போதைய நிலையில் மாவட்ட அபிவிருத்திக்குழுக்கூட்டம் மற்றும் தமக்கு உத்தியோக பூர்வ அறிவிப்புக்களை செய்து தொல்லியல் திணைக்களம் செயற்படகோரிய தவிசாளருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளமை அரசாங்கத்தின் அறிவிப்பிற்கும் நடைமுறைக்குமிடையில் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அன்றைய தினத்திலேயே வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தவிசாளருக்கு எதிராக ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட மற்றொரு வழக்கும் மீள மன்றில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. அனுமதியின்றி அச்செழு அம்மன் வீதியை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து பிரதேச சபையின் அனுமதியின்றி வீதி அதிகாரசபை நாட்டிய பெயர்ப் பலகையினை தவிசாளர் அகற்றிய வழக்கே மீள எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

குறித்த விளம்பரப்பதாகை அகற்றப்பட்டதைத் தொடர்ந்து தவிசாளரைக் கைதுசெய்வதற்கு பொலிசார் தீவீரமுயற்சி எடுத்தனர். தவிசாளர் மல்லாம் நீதிமன்றில் தோன்றி சட்டத்தரணி வி.திருக்குமரன் தலைமையிலான சட்டத்தரணிகள் குழாம் ஊடாக உள்ளூராட்சிக்குப் பகிரப்பட்ட அதிகாரத்தை தான் நடைமுறைப்படுத்தும்போது எழுந்த பிரச்சினை எனத் தெரிவித்து அரசியல் பழிவாங்கல் கைதில் இருந்து முன் பிணையில் தற்போது உள்ளார். இந்நிலையில், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சட்டத்திணைக்களம் உள்ளூராட்சித் திணைக்களத்தின் சட்டவிதிகள் மீது கவனத்தினைச் செலுத்தாது தாம் பிரதேச சபையின் அனுமதி பெறவேண்டிய அவசியமில்லை என ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தது.

இந் நிலையில் இன்று மத்திய அரசாங்கத்தின் தாபனங்களான தொல்லியல் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை போன்ற மத்திய அரசின் தாபனங்கள் உள்ளூராட்சி மன்ற அதிகாரத்தை தவிசாளர் பிரயோகித்தமைக்காக அவருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.


# மரண அறிவித்தல்

மறைவு
10
-
04
-
1971



மறைவு
15
-
04
-
2021

## அருந்தவம் தயாகரன் (பாபு)

யாழ். மானிப்பாய் ஆனந்தா வீதியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட அருந்தவம் தயாகரன் அவர்கள் 15-04-2021 வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னார், காலஞ்சென்ற அருந்தவம் – கருணாதேவி தம்பதிகளின் அன்பு மகனும், முரளி – சரளா தம்பதிகளின் பாசமிகு மருமகனும்,

சாந்தி அவர்களின் அன்புக் கணவரும், விகாஷ், வர்சிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருபாகரன்(கிருபா), கிருபரஞ்சினி, சன்சலா(பவா), சுவிதா ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரதி, றொபின்சன், சந்திரமோகன், சதீஸ், சுமதி, மணிகண்டன்(மணி), பிறேமராஜ், சங்கரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், செரிண்டன், அதிஷயா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும்,திஷான், கிருஷாந், லூர்த்திகா, லக்ஷ்னா, லக்ஷ்யா, சபீனா, சாகித்தியன், சன்சிகன், சன்சிகா, சஞ்சீவ், அட்விகா, அட்வைட் ஆகியோரின் அன்பு மாமனாரும்,

ஷாலினி, சூரியவர்ஷினி ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

தொடர்புகளுக்கு: கிருபா - சகோதரன் Mobile : +33664838323


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# மிஸ்ரா அசத்தல் பந்துவீச்சு: மும்பையை வென்றது டில்லி!



சென்னை, ஏப். 21

அமித் மிஸ்ராவின் அசத்தல் பந்துவீச்சால் மும்பை இந்தியன்ஸ் அணியை 6 விக்கெட்களால் வெற்றி கொண்டது டில்லி அணி.

ஐ.பி.எல். இருபது - 20 தொடரில் நேற்றிரவு நடந்த 13ஆவது போட்டியில் மும்பை இந்தியன்ஸ் - டில்லி கப்பிட்டல்ஸ் அணிகள் மோதின.

சென்னையில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ரோஹித் சர்மா - குயின்ரன் டி கொக் இணை தொடக்கம் கொடுத்தது. ஸ்ரொய்னிஸ் வீசிய மிதவேகப் பந்தை தட்டி ஆட முனைந்து விக்கெட் காப்பாளர் ரிஷப் பந்திடம் பிடி கொடுத்து வெளியேறினார் கொக். அப்போது அவர் 2 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

அடுத்து வந்த சூரியகுமார் யாதவ், சற்றுப் பொறுமையாக ஆடினார். 4 பந்துகளை பௌண்ட்ரிக்கு விரட்டிய அவர் 24 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த, இஷான் கிஷனும் நிதானமான ஆட்டத்தையே வெளிப்படுத்தினார். இதனிடையே 3 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்கள் என விளாசிய ரோஹித் சர்மா 44 ஓட்டங்களை எடுத்திருந்தபோது மிஷ்ராவின் பந்தில் ஸ்மித்திடம் பிடி கொடுத்து வெளியேறினார்.

பின்னர் வந்த ஹார்திக் பாண்ட்யா 0, குர்ணல் பாண்ட்யா 1, கிரன் பொலார்ட் 2 என்று வந்தவேகத்திலேயே வெளியேறினர். நிதானம் காட்டிய இஷான் கிஷன் 28 பந்துகளில் 26 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 137 ஓட்டங்களை எடுத்தது மும்பை இந்தியன்ஸ் அணி.

டில்லியின் பந்துவீச்சில் அமித் மிஸ்ரா 4, ஆவேஷ் கான் 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

138 என்ற இலகுவான இலக்கு நோக்கி துடுப்பெடுத்தாடியது டில்லி கப்பிட்டல்ஸ்.

பிரித்திவி ஷா, தவான் இணை வழக்கம் போல் தொடக்கம் கொடுத்தது. ஆனால், ஷா 7 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஜயந்த யாதவின் பந்தில் அவரிடமே பிடி கொடுத்து வெளியேறினார்.

இதனால், தவானுடன் இணைந்தார் ஸ்ரீவன் ஸ்மித். இருவரும் நிதானமாக ஆடினர். இணைப்பாட்டமாக 53 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில், 4 பௌண்ட்ரிகளுடன் 33 ஓட்டங்களை எடுத்த ஸ்மித் ஆட்டமிழந்தார்.

அடுத்து லலித் யாதவ் வந்த நிலையில், தவான் 5 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 45 ஓட்டங்களை எடுத்து சாகரின் பந்தில் ஹார்திக் பாண்ட்யாவிடம் பிடி கொடுத்து வெளியேறினார்.

அடுத்து வந்த ரிஷப் பந்த் 7 ஓட்டங்களுடன் வெளியேற டில்லி தடுமாறியது. ஆனாலும், 19 பந்துகளில் 23 ஓட்டங்கள் என இலக்கு அண்மையில் இருந்தது. லலித் யாதவும், சிம்றொன் ஹெட்மேயரும் இணைந்து அணியை இலகுவாக வெற்றிக்கு அழைத்துச் சென்றனர்.

19.1 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 138 ஓட்டங்களைப் பெற்று 6 விக்கெட்களால் டில்லி அணி வெற்றி பெற்றது.

லலித் யாதவ் 22 ஓட்டங்களுடனும், ஹெட்மேயர் 2 பௌண்ட்ரிகளுடன் 14 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

மும்பை இந்தியன்ஸின் பந்துவீச்சில் ஜயந்த் யாதவ, பும்ரா, ராகுல் சாகர், கிரன் பொலார்ட் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக அமித் மிஸ்ரா தெரிவானார். (ஐ)

## ‘வடக்கின் பெரும்போர்’ ஜூன் 3இல் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி - சென். ஜோன்ஸ் கல்லூரிகள் மோதும் “வடக்கின் போர்” என வர்ணிக்கப்படும் பெருந்துடுப்பாட்டப் போட்டி எதிர்வரும் ஜூன் 3ஆம் திகதி ஆரம்பமாகி 5 ஆம் திகதி வரை நடக்கவுள்ளது.

115ஆவது ஆண்டாக நடக்கும் இந்தப் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் அனுமதியுடனே இந்தப் போட்டி இடம்பெறும் என்றுயாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர், கலாநிதி எஸ்.கே.எழில்வேந்தன் அறிவித்துள்ளார்.

போட்டி நடைபெறும் மைதானம் மற்றும் அதன் சூழலுக்குள் மாணவர்கள் மற்றும் பார்வையாளர்களை அனுமதிப்பதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இரண்டு பாடசாலைகளின் அதிபர்கள், பிரதி அதிபர்கள், உப அதிபர்கள், விளையாட்டுத்துறை பொறுப்பு ஆசிரியர்கள், இரண்டு அணிகளினதும் பொறுப்பு ஆசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள், அணி வீரர்கள், நடுவர்கள், போட்டி நடுவர்கள், வர்ணனையாளர்கள், பெறு பேற்றுப் பலகை கணிப்பீட்டாளர்கள், பொலிஸ், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், அனுசரனையாளர்கள், மைதான பராமரிப்பாளர்கள் மற்றும் இரண்டு பாடசாலைகளின் மாணவர் தலைவர்கள் தலா 20 பேர், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் தொண்டர்கள் தலா 5 பேர் மட்டுமே மைதானத்துக்குள் அனுமதிக்கப்படுவார்கள்.

போட்டி நேரலை ஒளிபரப்பு உள்ளூர் தொலைக்காட்சி அலைவரிசைகளில் இடம்பெறும்.

அத்துடன், இரு பாடசாலை அணிகளுக்கும் இடையிலான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் ஒருநாள் போட்டி யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் ஜூன் 12ஆம் திகதி இடம்பெறும் என்றும் மத்திய கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (ஐ)

## 12 பிரபல கழகங்கள் இணைந்து ஐரோப்பிய சுப்பர் லீக் தொடர்!

லண்டன், ஏப். 21

ஐரோப்பிய உதைபந்தாட்டத்தில் அங்கம் வகிக்கும் 12 கழகங்கள் புதிதாக ‘ஐரோப்பிய சுப்பர் லீக்’ என்ற போட்டியை அறிவித்துள்ளன.

லிவர்பூல், மன்செஸ்டர் யுனைடெட், ஆர்சனல், செல்சியா, மன்செஸ்டர் சிற்றி, டோட்டன்ஹாம், ரியல் மட்ரிட், பார்ஸிலோனா, அட்லெடிகோ மாட்ரிட், ஜூவென்டஸ், இன்டர்மிலன், ஏசிமிலன் ஆகிய கழகங் களே இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளன.

அத்துடன், இந்த 12 கழகங்களும் ஐரோப்பிய உதைபந்தாட்ட சங்கங்களின் சம்மேளனத்தால் நடத்தப்படும் சம்பியன்ஸ் லீக் தொடரிலிருந்து விலகியுள்ளன. 2024-ஆம் ஆண்டு தொடங்கும் சம்பியன்ஸ் லீக் போட்டியில் கூடுதல் அணிகளை இணைத்து, ஆட்டங்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்கும் ஐரோப்பிய உதைபந்தாட்ட சங்கங்களின் கூட்டமைப்பின் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.


புதிதாக தொடங்கப்படும் இந்த ஐரோப்பிய சுப்பர் லீக் போட்டியின் நிறுவன தலைவராக ரியல் மட்ரிட் தலைவர் பிளாரென்டினோ பெரெஸ் இருப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சம்பியன்ஸ் லீக், ஐரோப்பிய லீக் போட்டிகளின் ஊடாகவே, 20 அணிகள் கொண்ட போட்டியாக ஐரோப்பிய சுப்பர் லீக்கை நடத்த முனைந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, புதிய லீக் போட்டியில் பங்கேற்கும் அணிகள் உள்நாட்டு மற்றும் ஐரோப்பிய அளவில் மட்டும் அல்லாமல் உலகளவில் நடைபெறும் போட்டிகளிலும் பங்கேற்கத் தடை விதிக்கப்படும் என்று ஐரோப்பிய உதைபந்தாட்ட சங்கங்களின் சம்மேளனம் எச்சரித்துள்ளது. மேலும், சம்பந்தப்பட்ட வீரர்கள் தங்களது தேசிய அணியில் விளையாடவும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று கூறியுள்ளது.

இந்த புதிய ஐரோப்பிய சுப்பர் லீக் போட்டிக்கு அங்கீகாரம் அளிக்கவில்லை என்று சர்வதேச உதைபந்தாட்ட அமைப்பான ‘பிபா’ தெரிவித்துள்ளது. (ஐ)

## சென்னை ஆடுகளத்துக்கு ஏற்ப வீரர்கள் தகவமைக்க வேண்டும்!

### மஹேல ஜெயவர்த்தன ஆலோசனை



சென்னை, ஏப். 21

சென்னை ஆடுகளம் நல்லதோர் ஆட்டத்தை வழங்கக் கூடியதாகும். மெதுவான பந்துக்கு சாதகமான வகையில் இருந்து அது சவால் அளிக்கிறது. அந்த சவாலுக்கு ஏற்றவாறு தகவமைத்துக்கொண்டு விளையாடுவதே எந்த வீரருக்கும், அணிக்கும் முக்கியம் என்று மும்பை இந்தியன்ஸ் அணியின் பயிற்றுவிப்பாளர் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

எங்களது பந்துவீச்சாளர்கள் அதற்கேற்றவாறு தங்களை மாற்றிக் கொண்டுள்ளனர். ஹார்திக் பாண்ட்யாவின் தோளபட்டையில் லேசான வலி இருப்பதால் அவர் இம்முறை தொடரில் இதுவரை பந்துவீசவில்லை. இளம் வீரரான ராகுல் சாஹர் இன்னும் அதிகம் கற்க வேண்டியுள்ளது - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.04.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி


**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதை வழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ் அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : பாரதீ-பெண்கள் உளவியல்



**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-
சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்

**இரவு**
7.00 மணி : COFFE WITH பிரமுகர்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்



10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
சந்தானம் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம்
(கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம்
(வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம்,
விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

**பகல்**
1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம்
கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம்
தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி
வினாத்தாள்
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி
வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் கைதடி வடக்கு
கயிற்றசிட்டி கந்தசாமி கோவில்
10.00 மணி : பக்தி பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் காரைநகர்
சிவன் கோவில்
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : யாழ்ப்பாணம் கைதடி வடக்கு
கயிற்றசிட்டி கந்தசாமி கோவில்

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி - ஆலயப் பாடல்கள்
8.00 மணி - ஜெபமாலை
9.00 மணி - மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி - திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி - குழந்தை யேசு மன்றாட்டு
11.30 மணி - ஜெபமாலை

**பகல்**
12.00 மணி - திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி - மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி - நற்சிந்தனை
3.00 மணி - பாடல்
4.30 மணி - திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
7.00 மணி : பிறை பிரசங்கம்

**இரவு**
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org